அமைச்சின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் நடவடிக்கைகளின் போது அமைச்சினால் நிறைவேற்றப்படும் பல்வேறு அலுவல்களின் போது அமைச்சின் நிதி சார்ந்த நிர்வாகத்தின் முறையான தன்மையை உறுதி செய்வதற்காக அதன் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்தப்படும் உள்ளக ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அந்த நடவடிக்கைகளின் தவறுகள் மற்றும் ஊழல்களைத் தடுப்பதற்கு மற்றும் அவற்றை வெளிப்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தும் உள்ளக ஆய்வின் முறையான தன்மை சம்பந்தமாக தொடர்ந்தேர்ச்சியான ஆய்வை மற்றும் சுயாதீன மதிப்பீட்டைப் பேணிவரல், அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிடும்போது,செயற்படுத்தும்போது அவற்றின் முன்னேற்றம் பற்றி நிச்சயித்துக் கொள்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது இணைப்பாளராக நடவடிக்கை மேற்கொள்வதும் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளது.

அமைச்சின் நிதிசார் நிர்வாகம் மற்றும் கணக்கீடு தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தவறுகள் மற்றும் ஊழல்களைத் தடுப்பதற்காக அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களினுள் நடைமுறைப் படுத்தப்படும் உள்ளக சோதனைகள் மற்றும் நிர்வாக முறையானது திட்டத்திற்கு அமைய மற்றும் உண்மையான செயற்பாட்டில் சிறப்பாக இயங்குகின்றதா என்பதனைக் கண்டறிதல்.
- கணக்குகள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் சரியான தன்மை மற்றும் நம்பகத் தன்மையை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படும் கணக்கியல் முறை ஊடாக சரியான நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றதா என்பதனை ஆராய்தல்.
- பணியாட் தொகுதியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது அவர்களது செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சிற்குரிய நிறுவனங்களின் கீழ் காணப்படும் சொத்துக்களின் பாதுகாப்புக்காக போதுமான அளவு ஏற்பாடுகளை மேற்கொண்டு சகல வகையிலுமான நட்டங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதா என ஆராய்தல்.
- தாபனக் கோவை, நிதிப் பிரமாணக் கோவை, அரசாங்க நிர்வாக அமைச்சு மற்றும் திறைசேரியினால் அடிக்கடி வெளியிடப்படும் அறிவுரைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை ஆராய்தல்.
- வீண் விரயம், செயலற்ற நிலைக் கொள்ளளவு மற்றும் அளவை மீறிய செலவுகளை தவிர்ப்பதற்குப் போன்றே வெளிப்படுத்திக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி பற்றி ஆராய்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களின் கணக்குகள் நடைமுறைகள் மற்றும் ஏதேனும் பணச் செலவுக்கு காரணமான பணிகளை சோதனையிடல் மற்றும் அமைச்சு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களின் சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் முறையாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதனை ஆராய்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- மேற்குறிப்பிடப்பட்ட அலுவல்கள் தவிர அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை மூன்று மாதங்களுக்கொருமுறை நடாத்துவதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

2016ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு;

1. ஜுன் 2016 - ஆண்டின் தேசிய இளைஞர் படையணியால் கொள்வனவு செய்யப்பட்ட T Shirt தொடர்பான அவதானிப்பு அறிக்கை.
2. ஏப்பிரல் 2016 – அமைச்சின் வங்கி இணக்க ஆய்வு செய்யப்பட்டது.
3. மே 2016 – அமைச்சின் வங்கி இணக்க ஆய்வு செய்யப்பட்டது.

4. ஜூலை 2016 - அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களினது உள்ளக கணக்காய்வு அறிக்கை
5. 2016 – யுவன் புராய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பரிசீலனை.
6. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கை.
7. அமைச்சின் நிதியாளர் பிரிவின் உள்ளக கணக்காய்வு அறிக்கை.
8. வேலிசற அழகிவத்தை மேல் மலை வீதியின் கட்டுமானப்பணி தரம்குறைவாக இருந்தமை தொடர்பான அவதான அறிக்கை (Joint Mendis Company).
9. ஆமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் திணைக்களம் மற்றும் நிறுவனங்களினது முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு நான்கு உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

1.5.7 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- அமைச்சின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டறிக்கையை தயாரித்தல்
- அமைச்சின் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்கான செலுத்துகை நடவடிக்கைகள்
- அமைச்சின் இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரித்தல்
- வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு உட்பட அமைச்சின் சொத்துக்களின் முகாமைத்துவம்
- உரிய தரப்பினருக்கு செலவு விபரங்களை வழங்குதல் மற்றும் அவற்றைக் குறித்துக் கொள்ளல்.
- அமைச்சின் பெறுகை (கேள்வி) நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
- அமைச்சிற்கான தீர்மானங்களை எடுப்பதற்காக முக்கியத்துவம் வாய்ந்த நிதிசார் தகவல்களை வழங்குதல்

1.6 மனி தவள முகாமைத்துவம்

1.6.1 ஆளணி விபரம்

31 மார்கழி 2016 இல் உள்ளவாறு உத்தியோகத்தர்களது சாராம்ச விபரம் பின்வருமாறு:

வயது அடிப்படையில் (வருடங்கள்)	உத்தியோகத்தர்களது எண்ணிக்கை		
	ஆண்	பெண்	மொத்தம்
<25	12	6	18
25-35	69	182	251
36-45	88	71	159
46-55	44	20	64
>55	6	7	13
மொத்தம்	219	286	505

அட்டவணை 1.1: 31 மார்கழி 2016 இல் உள்ளவாறு உத்தியோகத்தர்களது சாராம்ச விபரம்

- தயவு செய்து மேலதிக விபரங்களுக்கு இணைப்பு 1 ஐப் பார்க்கவும்

1.6.1 உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2016 இல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டச் சாராம்சம் பின்வருமாறு:

	பயிற்சி /பயிற்சிப்பட்டறையின் பெயர்	காலப் பகுதி	பயிற்சி பெற்ற உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட தொகை
01.	இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவ உரிமையை புதுப்பித்தல்	1 ஆண்டு - 2016	01	ரூபா .12,750/-
02.	சிவில் ஓய்வூதியங்களைத் தயாரிக்கும் முறை	30 - 31 பங்குனி 2016	01	ரூபா.8,500/-
03.	தேசிய மனிதவள மாநாடு	21 - 22 ஆனி 2016	01	ரூபா 15,096/-
04.	வர்த்தகத்தில் சேவைகள் பயிற்சிப்பட்டறை	27 - 28 ஆனி 2016	01	ரூபா.1,500/-
05.	சிறப்பு பேச்சுப் பயிற்சி	ஆடி - மார்கழி 2016	01	ரூபா.8,500/-
06.	கணக்கீடு	28 ஆடி 2016	04	ரூபா.12,000/- (3000*4)
07.	முதுமானிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	2016	02	ரூபா.159,750/-
08.	பொது ஆங்கில பாட நெறி – பிரிட்டிஸ் கவுன்சில்	10 ஐப்பசி - 18 - மார்கழி 2016	10	ரூபா.415,000/-
09.	அலுவலக முறைமை பயிற்சிநெறி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிரந்தர முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள்	19,20 மார்கழி மற்றும் 22,23 மார்கழி 2016 (இரு குழுக்கள்)	79	ரூபா.226,410.18/- *
10.	பொதுத்துறை கொள்வனவு நடைமுறை மற்றும் ஒப்பந்த நிருவாகத்தில் டிப்ளோமா கற்கைநெறி	15 மார்கழி - 2016	01	ரூபா.100,000/-

அட்டவணை 1..2 2016 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட உள்ளூர் பயிற்சி நெறி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான சாராம்சம்

* இது ஒரு பகுதிக் கொடுப்பனவாகும் மிகுதி கற்கைகளுக்குரிய கொடுப்பனவு (ரூபா 187,100.93) 2017 தை மாதத்தில் செலுத்தப்படும்.

1.6.2 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2016 இல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய வெநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் சாராம்சம் பின்வருமாறு:

	பயிற்சி /பயிற்சிப்பட்டறையின் பெயர்	காலப் பகுதி	பயிற்சி பெற்ற உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை எண்ணிக்கை	செலவு செய்யப்பட்ட தொகை
01.	பொதுத்துறை கொள்வனவு நடைமுறை மற்றும் ஒப்பந்த நிருவாகத்தில் டிப்ளோமா கற்கைநெறி- நாடுகளுக்கான 2 வது விஜயம்	13 – 24 பங்குனி 2016	01	631,000.00
02.	சார்க பிராந்திய கலந்துரையாடல் -தந்திரோபாய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக இளைஞர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தல்	23 – 27 பங்குனி 2016	01	46,520.36
03.	சமூக அபிவிருத்தி குழு 04 ஆவது அமர்வு மற்றும் ஆசிய பசுபிக் இளைஞர் கொள்கைகள் உருவாக்குவதற்கான இயலுமை விருத்தி பயிற்சிப்பட்டறை	27 – 31 பங்குனி 2016	01	44,825.00
04.	“ பிராந்திய அபிவிருத்தி கொள்கைகள்” நாட்டுக்கான விஷேட உதவி நகழ்ச்சித்திட்டம்	03 – 24 சித்திரை 2016	01	124,814.00
05.	02 வது உலகளாவிய பயிற்சிப்பட்டறை – பல்லுயிரிய நிதி நிதயத்துக்கான முன்னெடுப்பு (BIOFIN)	10 -17 சித்திரை 2016	01	29,069.00
06.	தெற்காசிய துணைப் பிராந்திய ஒத்துழைப்பு (SASEC) 2025 இரண்டாம் பிராந்திய ஆலோசனை பயிற்சிப்பட்டறை	09 – 12 வைகாசி 2016	01	18,080.00
07.	அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான அபிவிருத்தி மாதிரி அமைச்சரவைக்கான பயிற்சிப்பட்டறை 2016	24 வைகாசி - 03 ஆனி 2016	01	47,542.72
08.	அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான பொதுத்துறை இராஜதந்திரக் கொள்கை ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி கருத்தரங்கு 2016	04 – 24 ஆவணி2016	03	2,85062.40
09.	நஷனல் புளு ஓசன் தந்திரோபாயம் (NBOS) ஊடாக பொது துறையை மாற்றுதல் தொடர்பான MTCP கற்கை	10 – 27 ஆவணி 2016	02	100,960.00
10.	பிராந்திய இயலுமை அபிவிருத்தி பயிற்சிப்பட்டறை	12 – 17 புரட்டாதி 2016	01	131,841.00
11.	பிராந்திய மதிப்பீட்டு இயலுமை அபிவிருத்தி பயிற்சி	23 -31 ஐப்பசி 2016	03	162,093.00
12.	அவுஸ்ரேலியா விருதுகள் பெலோசிப் திட்டம் 2016 “ இலங்கையில் பெண்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி வசதிகள்	01 ஐப்பசி – 13 கார்த்திகை 2016	01	178,467.00
13.	“ அனைவருக்கும் கல்வி” தெற்கு மற்றும் மேற்கு ஆசியப் பிராந்திய அவுஸ்ரேலியா விருதுகள் - பழைய மாணவர்கள் பயிற்சிப்பட்டறை 2016	16 – 19 கார்த்திகை 2016	01	24,265.85
14.	நேபாளத்தின் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆய்வுக் கற்கை விஜயம்	15 – 20 மார்கழி 2016	01	149,989.00

அட்டவணை 1.3 2016 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயிற்சிநெறி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான சாராம்சம்

அத்தியாயம் 02

அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்/விடயங்கள்

2.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் (DCB) -2016

கௌரவ பிரதமஅ மைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் கீழான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் (DCB) கீழ் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் 10.0 மில்லியன் ரூபாநிதியை ஒதுக்கீடு செய்வதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் DCBதிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது முகங்கொடுத்த சிரமங்களைக் கவனத்திற் கொண்டு மேலதிகமாக 05 மில்லியன் ரூபாநிதி உட்பட 2016 ஆண்டில் மொத்தம் 15 மில்லியன் ரூபாவீதம் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் (DCB) கீழ் நாடு பூராவும் செயற்படுத்துவதற்கு 23,547 செயற் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 23,444 செயற் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டன. பௌதீகரீதியிலான முன்னேற்றம் 99.56% ஆகும். ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு 3357.19 மில்லியன் ரூபாவாக இருப்பதுடன், நிறைவு செய்யப்பட்டுள்ள செயற் திட்டங்களின் மொத்தப்பெறுமதி 3269.55 மில்லியன் ரூபாவாகும். நிதிசார் முன்னேற்றம் 97.39% ஆகும். வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு துறைகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற் திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான தகவல்கள் இங்கு அட்டவணை 2.1 இன் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

துறைகளுக்கமைய வகைப்படுத்தல்	அங்கீகரிக்கப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை	%	நிதி ஏற்பாடு (மில். ரூபா)	%
பிரஜைகளை அடிப்படையாகக் கொண்ட நீர் விநியோகத் திட்டங்கள்	516	2%	91.31	3%
சிறிய அளவிலான மின்சாரம் வழங்கல் திட்டங்கள்	347	1%	28.8255	1%
கிராமப்புறப் பாதைகள் அபிவிருத்தித் திட்டங்கள்	4870	21%	1112.7721	33%
சமூக அபிவிருத்தித் திட்டங்கள்	4244	18%	765.10733	23%
சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள்	228	1%	54.824186	2%
சமூக நலனோம்புகை	9483	40%	841.30709	25%
சமூக சேவைகள்	1333	6%	108.30344	3%
சமூக பாதுகாப்புத் திட்டங்கள்	11	0.05%	1.78	0.05%
கிராமீய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்	270	1%	41.09	1%
ஏனையவை	2245	10%	311.86892	9%
மொத்தம்	**23547**	**100%**	**3357.1886**	**100%**

அட்டவணை 2.1: பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (DCB) – 2016 செயற் திட்டங்கள் பற்றிய தகவல்கள்



வரைபடம் I: பன்முகப்படுத்தப்பட்டவரவுசெலவுத்திட்டநிகழ்ச்சித்திட்டம்

2016 – கம்பஹா மாவட்டத்தில் ஹறிஷ்சந்திரபுரத்தின் குளிப்பதற்கான கிணற்றின் கட்டுமாணப்பபணி பூர்த்தி செய்யப்பட்டது.

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

பொலநறுவ மாவட்டத்தில் - வறபிரிய நமலோயா விவசாயிகள் சமூகத்தின் மண்டபம் மீள்புனரமைக்கப்பட்டது.

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

கம்பஹ மாவட்டத்தில் - பட்டிபனத்தில் அமைந்துள்ள பஸ்ரியவத்த கோவிலின் முன்பகுதி பாதை கொன்கிறிற் பாதையாக மாற்றியமைக்கப்பட்டது.

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

2.2 கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RIDP)– 2016

கௌரவ பிரதம அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் ஊடாக தொழில் வாய்ப்புக்கள் மற்றும் சீவனோபாயத்திற்கான வாய்ப்புக்களை விருத்திசெய்தல் மற்றும் அனைத்து மக்களினதும் சமூக, பொருளாதாரதரத்தை உயர்த்தும் நோக்கில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் 2016 ஆம் ஆண்டில் பல உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உபயோகப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்கள் மற்றும் கிராமீய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்த ிசெய்தல் மீது விசேடகவனம் செலுத்தப்பட்டது.

மாநகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தவிர ஏனைய அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இந்தகிராமீய உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற் திட்டங்கள் நாடுபூராவும் அமைந்துள்ள 13,305 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டன. கிராமீய பொருளாதாரத்தை பலப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் அடிப்படைநோக்கமாக இருப்பதுடன், இதன் கீழ் கிராமப்புறபாதைகள் மற்றும் பாலங்களை நிர்மாணித்தல், பிரஜைகளை அடிப்படையாகக் கொண்டநீர் விநியோகத் திட்டங்களை செயற்படுத்தல், பொதுக் கிணறுகள் மற்றும் விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல், மின்சாரம் வழங்கல், நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராமீய சந்தைகள், மீன் விற்பனைநிலையங்களைநிர்மாணித்தல் போன்றஅபிவிருத்திநடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் கிராமீய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாடுபூராவும் 28,649 செயற் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவற்றில் 28,448 செயற் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டன. அவற்றின் பௌதீகரீதியிலான முன்னேற்றம் 99.29% ஆகும். ஒதுக்கீடுசெய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாடு13278.80 மில்லியன் ரூபாவாக இருப்பதுடன், நிறைவுசெய்யப்பட்டுள்ள செயற் திட்டங்களின் மொத்தப் பெறுமதி12909.96 மில்லியன் ரூபாவாகும். நிதிசார் முன்னேற்றம் 97.22% ஆகும். வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு துறைகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற் திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான தகவல்கள் இங்கு அட்டவணை2.2 இன் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அபிவிருத்திப் பிரிவு	அங்கீகரிக்கப் பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை	%	நிதி ஏற்பாடு (மில். ரூபா)	%
சிறிய நீர்ப்பாசன அபிவிருத்த ிதிட்டங்கள்	941	3%	513.39	4%
பிரஜைகளை அடிப்படையாகக் கொண்ட நீர் விநியோகத் திட்டங்கள்	1045	4%	505.75	4%
சிறிய அளவிலான மின்சாரம் வழங்கல் திட்டங்கள்	33	0.1%	7.10	0.1%
கிராமப்புறப் பாதைகள் அபிவிருத்தித் திட்டங்கள்	22467	78%	11,195.83	84%
ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்கள்	1437	5%	861.76	6%
நேரடிமானியம்	2726	10%	194.97	1%
மொத்தம்	**28,649**	**100%**	**13,278.80**	**100%**

அட்டவணை2.2 : கிராமீய உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தித் திட்டம் (RIDP) – 2016 செயற் திட்டங்கள் பற்றிய தகவல்கள்



வரைபடம்: துறைசார் கருத்திட்டங்கள் மற்றும் கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு - 2016

அமைகக்பபடடது.

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

2. புத்தள மாவட்டத்தில் ஹிக்கககந்த பாதைக்கான தொகுதிகள் கொன்கிறீட் அமைக்கப்பட்டதுPuttalam

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

3. பொலநறுவ மாவட்டத்தில் கினிநமன கமதனுடைய கட்டுமாண பூர்த்தி செய்யப்பட்டது.

முன்னைய நிலைமை

தற்போதைய நிலைமை

2.3 மாவட்ட மட்டத்திலான உட்கட்டுமான அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித் திட்டம் -2016

மாவட்ட மட்டத்திலான உட்கட்டுமான அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மக்களின் சமுக பொருளாதார நிலைமையை மேம்படுத்தலுக்கு பங்களிப்பு செய்யவதற்காக கருத்திட்டங்களை நடைமுறைப்புடுத்துவதற்கு எடுக்கப்பட்ட முன்முயற்சிகளின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 2270 மில்லியன் 2016 ஆம் ஆண்டு பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. கிராமிய பாலங்கள் மற்றும் மதகுகள் நிர்மாணம்/ அபிவிருத்தி, வீதிகள் நிர்மாணம்/மேம்படுத்தல், சிறு நீர்பாசன கால்வாய்கள் அபிவிருத்தி, நீர் வினியோக கருத்திட்டங்கள், இயற்கை அழிவுகளினால் சேதமடைந்த கருத்திட்டங்கள் மறுசீரமைப்பு, சந்தை நிர்மாணம், அதிக விலை மற்றும் அதிக கேள்வியை தர கூடிய வார சந்தைகள்/ பொருளாதார நிலையங்கள், கட்டிடங்கள் நிர்மாணம், விவசாய அபிவிருத்தி போன்ற துறைகளின் கீழ் கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.

மேற் கூறப்பட்ட துறைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய சாரம்சம் கீழ் தரப்படுகின்றது.

இலக்கம்	பிரிவு	அனுமதிக்கப்பட்ட தொகை (மில்லியனில்)	அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்கள்	முடிவுறுத்திய கருத்திட்டங்கள்	31.12.2016 படியான செலவீனம் (மில்லியனில்)	நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த பெறுமதி 31.12.2016 (மில்லியனில்)	தொடரும் கருத்திட்டங்கள்
01	வீதிகள் அபிவிருத்தி	2154.43	676	660	924.31	1786.66	16
02	கட்டிடங்கள் நிர்மாணம்	33.51	6	5	6.15	7.92	1
03	விவசாய அபிவிருத்தி	15.57	13	13	12.03	15.46	-
04	நீர் வினியோகம்	1.32	1	1	1.21	1.21	-
05	ஏனைய	18.22	1	1	5.24	10.24	-
மொத்தம்		**2223.05**	**697**	**680**	**948.94**	**1821.49**	**17**

அட்டவணை 2.3 : மேற் கூறப்பட்ட துறைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய சாரம்சம்

697 அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 680 கருத்திட்டங்கள் 2016வது வருடத்திற்குள் முடிவுறுத்தப்பட்டன. முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பௌதிக முன்னேற்றமானது 98% ஆகும். ரூபா 948.94 மில்லியன் கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகையாக இருக்க மொத்தம் ரூபா 872.56 மில்லியன் நிதி இன்மை காரணமாக செலுத்தபட முடியாத கையிருப்பிலுள்ள பட்டியல்கள் ஆக உள்ளன. ஆகவே 2016வது வருடத்திற்குள் முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த பெறுமதி ரூபா 1821.49 மில்லியன் ஆக இருக்க கருத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட நிதி முன்னேற்றமானது 82% ஆகும்.

கிராமிய மக்களின் சமுக பொருளாதார நிலைமையை மேம்படுத்தலை நோக்கமாக கொண்டுஇந்த நிகழ்ச்சித் திட்டமானது இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், பதுள்ளை, பொலன்நறுவை, கொழும்பு, கம்பாக, அம்பாறை, நுவரெலியா, காலி, அனுராதபுரம், மாத்தளை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது.


நீர் வினியோக கருத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் கல்மிலிவா, கட்டுகெலியாவ அன்டுறாவ இல் குழாய் இடல் - ரூபா 1.32 மில்லியன்

கிரிஈல்ல சிறி சுகத்தாரம வீதி கொன்கிரிட் இடல் - ரூபா 2.92 மில்லியன்

முவாகம கீமானந்த மாவத்த 800 நீடித்த காபெற் இடல் - ரூபா 16.06 மில்லியன்

போருவளை மீன்பிடி சேவை நிலையம் நிர்மாணம் - ரூபா 4.6 மில்லியன்

மாத்தளை கிம்பிசா டிகம்பத்கா வீதி காபெற் இடல் - ரூபா 200 மில்லியன்

2.4. திட்டமிடல் மற்றும் கொள்கைகள் அழுலாக்கல் தொடர்பான செயற்பாடுகள்

- அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பித்தல்: அமைச்சினால் 2016 ஆண்டு காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் வருமாறு: (தயவுசெய்து இணைப்பு IV ஐ பார்க்கவும்)
- நிலையான அபிவிருத்தி சம்பந்தமான சட்டமூலத்தை தயாரித்தல்
- வரையறுக்கப்பட்ட மனித வளங்கள் சேவைகள் முகவர் நிலையத்தை அமைத்தல்
- கொள்கை அபிவிருத்தி அலுவலகம், அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மெகன்சி என்ட் கம்பனியுடன் இணைந்து "நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவத்திற்கான மத்திய அலகு" தாபிக்கப்படல்.
- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுடன் தொடர்பான 35 கூட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுப்பதற்கான தேசிய தகவல்கள் குழுவின் 11 கூட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் வசதிகளை ஏற்பாடு செய்தமை.
- பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் குழுவினால் அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இந்த அமைச்சின் கீழ் நிலவும் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்து தேவையான தகவல்களை துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பொருளாதார முகாமைத்துவத்துடன் தொடர்பான அமைச்சரவை குழு ஊடாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு தொடர்பாக எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ஏனைய அமைச்சுக்களுடன் இணைந்து இலங்கையின் நேரிய முறையிலமைந்த புவியியல் ரீதியிலான எல்லை தொடர்பான கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை, முன்னேற்ற அறிக்கை, வருடாந்த செயற் திட்டம் என்பவற்றை உரிய நேரத்தில் தயாரித்து நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அமைச்சின் கீழ் நிலவும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து 48 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியமை.

2.5 2016 ஆம் ஆண்டில் இளைஞர் அலுவல்கள் பிரிவு அடைந்துள்ள முன்னேற்றம்

(1) இளைஞர் அலுவல்கள் துறைக்கு மற்றும் இளைஞர் அபிவிருத்தியுடன் தொடர்பாக வெளிநாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் மற்றும் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்துவதுடன் 2016 ஆம் ஆண்டில் மலேசியாவுடன் இளைஞர் அலுவல்களுடன் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

(2) இளைஞர் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இளைஞர் அபிவிருத்தியுடன் தொடர்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய 2016 ஆம் ஆண்டின் நவம்பர் 17 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இலங்கையின் 25 இளம் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு அதிகாரிகள் இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டனர்.
- இலங்கை மற்றும் கட்டார் இராச்சியத்துக்கிடையில் இளைஞர் அபிவிருத்தியுடன் தொடர்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய 2016 ஆம் ஆண்டின் நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 02 ஆம் திகதி வரை 10 இளம் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு அதிகாரிகள் கட்டாருக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டனர்.

(3) உடல் மற்றும் உள சமநிலையைக் கொண்ட ஆரோக்கியமான இளம் சமூகமொன்றை தேசத்தில் தோற்றுவிப்பதற்காக விளையாட்டு ஆலோசகர் பயிற்சி செயலமர்வு - 2016

"உடல் மற்றும் உள சமநிலையைக் கொண்ட ஆரோக்கியமான இளம் சமூகமொன்றை தேசத்தில் தோற்றுவித்தல் எனும் தொனிப் பொருளின்" கீழ் நாடு பூராவும் காணப்படும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மற்றும் இளைஞர் படையணி நிலையங்களில் 50 விளையாட்டுப் பயிற்சி ஆலோசகர்களுக்காக நான்கு நாள் வதிவிட விளையாட்டுப் பயிற்சி செயலமர்வொன்று கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

அதற்கமைய, இந்த நிகழ்ச்சித் திட்டத் தொடரின் மூன்றாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், கடந்த ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டமாகவும் இந்த நிகழ்ச்சித் திட்டம் விளையாட்டுத் துறை அமைச்சு, தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் மற்றும் விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2016 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ToT Programmes for Developing Physical and Mental Fitness of Young Generation இற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதற்காக செலவு செய்யப்பட்டதுடன், அதற்கு 0.201 மில்லியன் ரூபா (ரூ.201,990.00) செலவிடப்பட்டது.

(4) தொற்றாத நோய்களை தடுத்துக்கொள்ளல் சம்பந்தமாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவுடன் இணைந்து செயற்படுத்த முடியுமான நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமாக ஆய்வு செய்தல் மற்றும் தொற்றாத நோய்கள் தடுப்புடன் (Non Communicable Diseases(NCD) Prevention) தொடர்பாக இளைஞர் சமூகத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான ஆரம்பத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதனுடன் தொடர்பாக இளைஞர் சமூகத்தை இணைத்துக் கொள்ள முடியுமான வழிமுறைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது. அந்த ஆய்வுகளுடன் இணையான வகையில் மதுபானம், புகையிலை (சிகரட்) மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் காரணமாக இளைஞர் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுத்துக் கொள்வதற்கு மற்றும் அதிலிருந்து அவர்களை விடுவித்துக் கொள்வதற்குத் தேவையான வழிமுறைகள் திட்டமிடப்பட்டதுடன், அந்தச் செயற்பாடுகளுடன் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒத்துழைப்புடன் கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்டம்	நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்ட திகதி	நோக்கம்	இலக்காக கொள்ளப்பட்ட குழு	செலவிடப்பட்ட தொகை (ரூ.)
கிளிநொச்சி	2016.06.15, 16	தொற்றாத நோய்களை தடுத்துக்கொள்ளல் சம்பந்தமாக இளைஞர் சமூகம் செயற்படுத்திய மற்றும் செயற் படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற் றத்தை ஆராய்தல்	தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்கள்	சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் செலவு செய்யப்பட்டது.
பொலன்னறுவை	2016.06.16, 17			
புத்தளம்	2016.09.27			தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் செலவு செய்யப்பட்டது.
இரத்தினபுரி	2016.11.29, 30			
செலவிடப்பட்ட மொத்தத் தொகை (தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் செலவு செய்யப்பட்ட தொகை)				0.452 மில்.ரூபா (ரூபா 452,091.00)

அட்டவணை 2.3 தொற்றாத நோய்களை தடுத்துக்கொள்ளல்

(5) இளைஞர் அலுவல்கள் பிரிவின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் அலுவல்கள் மற்றும் இளைஞர் பிரிவின் பணிகள் சம்பந்தமான முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த நிறுவனங்களுக்கு களச் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(6) நாஉல இளைஞர் படையணி நிலையத்தில் வெளிப்புற பயிற்சித் திட்டமொன்றை நடாத்தியமை

இளைஞர் அலுவல்கள் பிரிவில் சேவையாற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்களின் தொழில் சாரந்த ஆற்றல்களை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் 2016 ஜுலை மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளை அடிப்படையாகக் கொண்டு 2016 செயல் திட்டத்தில் Staff Capacity Building Training Programmes இன் கீழ் வதிவிடப் பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்த திட்டத்திற்காக 20 பணியாட் தொகுதி அங்கத்தவர்கள் பங்குபற்றியதுடன், கீழ் குறிப்பிடப்படும் துறைகளுடன் தொடர்பாக இந்த பயிற்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

- தலைமைத்துவப் பயிற்சி
- தனிநபர் ஆளுமை விருத்தி
- சமூக அபிவிருத்தி
- ஆக்கங்கள் மற்றும் சமூக ஒருமைப்பாடு
- தனி நபர் ஊக்குவிப்பு
- தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

(7) **தொழில் சார்ந்த அறிவை விருத்தி செய்தல் தொடர்பாக பணியாட் தொகுதி அங்கத்தவர்களுக்காக ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறியொன்றை நடாத்துதல்**

இளைஞர் அலுவல்கள் பிரிவில் பணியாற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்களின் தொழில் சார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்கில் British Council நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஆங்கில மொழிப் பாடநெறியைப் பயிலுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டதுடன் அதற்காக பணியாட் தொகுதியைச் சேர்ந்த 10 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

அதற்கமைய, இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் Language Skills Development Programmes இற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதற்காக செலவு செய்யப்பட்டதுடன், அதற்காக 0.415 மில்.ரூபா (ரூபா 415,000.00) செலவிடப்பட்டது.

(8) இளைஞர் விருதுகள் பிரிவுக்காக (National Youth Award Division-NYAD) ஒரு மில்லியன் ரூபா நிதியை வழங்கல்

இளைஞர் விருதுகள் பிரிவினால் நடாத்தப்படும் இளைஞர் விருதுகள் முகாம் மற்றும் அதில் கலந்து கொள்ளும் பிள்ளைகள் உட்பட பங்குபற்றுபவர்களின் நடவடிக்கைகளுக்காக இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் Special Friendship Youth Camp இற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளுக்காக இளைஞர் விருதுகள் பிரிவுக்கு அந்த நிதி வழங்கப்பட்டது.

01. கஷ்டப் பிரதேசப் பாடசாலைத் திட்டம்
02. காப்புறுதிக் காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தல்
03. பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு

(9) 2016 தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சியை நடாத்தியமை

சிறிய தொழில் முயற்சியாளர் பிரிவின் ஊடாக ஐந்தாவது தடவையாகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட தொழில் முயற்சிகள் - 2016 விற்பனைக் கண்காட்சி வெற்றிகரமான வகையில் ஏப்ரல் 01 முதல் 03 வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன் தொழில் முயற்சிகள் - 2016 விற்பனைக் கண்காட்சிக்காக இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த 15 மில்லியன் ரூபா (ரூ.15,000,000.00) சிறிய தொழில் முயற்சிகள் பிரிவுக்கு வழங்கப்பட்டது.

(10) தொழில் சார்ந்த வழிகாட்டல் மற்றும் தொழில் முயற்சிகள் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்

இளைஞர் சமூகத்தின் தொழில் தேவைகளை இனங்கண்டு கொள்வதற்காக கேள்விக் கொத்து ஒன்றைத் தயாரித்து அதனூடாக இளைஞர் யுவதிகளிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்தக் கேள்விக் கொத்துக்கள் தொடர்பாக 0.043 மில்.ரூபா (ரூபா 43,105.00) செலவிடப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட கேள்விக் கொத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்பும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவ மாணவியருக்காக தொழில் முயற்சிகள் அபிவிருத்தியுடன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2016.05.30 ஆம் திகதி இளைஞர் படையணி மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. அதற்காக 0.023 மில்.ரூபா (ரூபா 23,080.00) செலவிடப்பட்டது.

2016 யொவுன்புரய நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் யுவதிகளிடையே புதிய வியாபாரங்களை(தொழில் முயற்சிகளை) ஆரம்பிப்பதற்கு மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்பும் இளைஞர் யுவதிகளுக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் நடாத்தப்படும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின உதவியுடன் மாவட்ட மட்டத்தில் தொழில் துறை வழிகாட்டி மற்றும் தொழில் முயற்சிகள் பற்றிய பயிற்சிகளை இலக்காகக் கொண்டு “Decide Your Future” எனும் பெயரில் நிகழ்ச்சித் திட்டத் தொடரொன்று கீழ் குறிப்பிடப்படும் 21 மாவட்டங்களில் 2016.12.31 ஆம் திகதியாகும்போது செயற்படுத்தப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட 21 நிகழ்ச்சித் திட்டத் தொடருக்காக செலவு செய்யப்பட்ட தொகை = 0.461 மில்.ரூபா (ரூபா 461,289.10) ஆகும்.

(11) De CREATOR சஞ்சிகையை அச்சிடல்

இளம் சமூகத்தினரை அறிவுறுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் இளைஞர் அலுவல்கள் பிரிவின் ஊடாக **De CREATOR** சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் அந்த சஞ்சிகையின் முதலாவது மற்றும் இரண்டாவது மலர் அச்சிடப்பட்டு அரச நிறுவனங்கள் மற்றும் இளைஞர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

இலங்கையின் இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்டு பயன்மிக்க இளைஞர் சமூகமொன்றைத் தோற்றுவித்து இலங்கை தேசத்தை கட்டியெழுப்பும் செயற்பணிக்காக இந்த நாட்டு இளைஞர் யுவதிகளை பூகோள ரீதியிலான அறிவினால் பலப்படுத்தல் மற்றும் நல்லெண்ண மனப் பாங்குகளை விருத்தி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.

இங்கு மும்மொழிகளையும் பயன்படுத்தி இளைஞர் சமூகத்தினரிடையே சகவாழ்வை ஏற்படுத்துவதற்கும் இந்த நாட்டின் இளைஞர் வேலைவாய்ப்பின்மையை குறைத்து வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் தொழில் முயற்சிகள் சம்பந்தமான ஆர்வத்தை அதிகரித்து இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு வழிகாட்டுதல் மற்றும் நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வகையிலான ஆக்கங்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதனூடாக நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்காக இளைஞர் யுவதிகளை முனைப்புடன் ஈடுபடுத்தி அவர்களிடம் காணப்படும் அறிவு, மனப்பாங்கு, ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக De CREATOR சஞ்சிகை இந்த நாட்டின் இளைஞர், யுவதிகளுக்காக காலாண்டு சஞ்சிகையாக வெளியிடப்படுகின்றது. இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் Youth Awareness Programme இற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டது.

மலர்	சஞ்சிகையின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ.மில்.)
முதலாவது மலர்	7000	0.403 (ரூ.403,000.00)
இரண்டாவது மலர்	2500	0.324 (ரூ.324,000.00)
செலவிடப்பட்ட முழுத் தொகை		0.727 (ரூ.727,000.00)

அட்டவணை 24: De CREATOR சஞ்சிகையை அச்சிடல்

(13) எம்பிலிப்பிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் (National Centre of Leadership Development - NCLD) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைக்கிணங்க 2.25 மில்லியன் ரூபா (ரூ. 2,250,000.00) தொகை அந்த நடவடிக்கைக்காக வழங்கப்பட்டது.

2.6 பொருளாதார விவகாரங்கள் தொடர்பான நடவடிக்கைகள

2.6.1 பாதீட்டு முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் 2016

பொருளாதார விவகாரங்கள் பிரிவுற்கு பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனங்களுடன் 2016 பாதீட்டு முன்மொழிவுகளை நடைமுறைபடுத்த தேவையான படிமுறைகளை எடுத்தலுடன் குறித்த நிறுவனங்களின் 2016 பாதீட்டு முன்மொழிவுகளின் கால ரீதியான முன்னேற்ற அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு திணைக்களம், பொது தொழில்துறை திணைக்களம், நிதி அமைச்சு, திட்டமிடல் பிரிவு மற்றும் கருத்திட்ட முகாமை மற்றும் கண்காணிப்பு திணைக்களம் என்பவற்றுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.(தயவுசெய்து இணைப்பு X பார்க்கவும்).

2.6.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை

நாட்டில் ஒரு மில்லியன் வேலைவாய்ப்புக்களை 25,000 MSME பிரிவுகளை ஊடாக உருவாக்கும் என்ற அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் தேசிய கொள்ளைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து புதிய கடன் வழங்கல் திட்டம் ஒன்றை உருவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளன. புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை கிராமிய பொருளாதாரத்தின் விணைத்திறன் மற்றும் போட்டிபோடும் திறன் என்பனவற்றை மேம்படுத்தி வழங்கலும், கிராமங்களில் காணப்படும் இளைஞர்களின் விணைத்திறனையும் திறமையையும் பயன்படுத்தி புதிய சந்தை தளங்களையும் இணைப்புகளையும் உருவாக்கல்.

சிறிய மற்றும் மத்திய தொழில்துறை பிரிவு அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கலுக்கு கடன் திட்டங்களுக்குக்காக ஓர் வழிப்படுத்தும் குழு ஒன்றை நியமித்தல்.

“புதிய MSMEக்கான நடைமுறைப்படுத்தலுக்கான பணிப்புரைகள்” - இலங்கை மத்திய வங்கியினால் MSME துறையின் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பவற்றுக்கான கடன் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டள்ளதுடன் திட்டத்தின் முழுமையான முன்னேற்றம் வழிப்படுத்தல்குழுவினால் கண்காணிக்கப்படுகின்றது. “Saubagya கடன் திட்டத்திற்குள் சகல நுண்நிதி திட்டங்களை ஒன்று திரட்ட இலங்கை மத்திய வங்கியானது பொருத்தமான உதவு வழங்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. இத் திட்டங்கள் அண்மைய வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டதாலும் ஒவ்வொரு நுண்நிதி திட்டங்களில் இலக்கு நோக்கம் அதிகமாக வேறுபட்டு காணப்படுவதினாலும் உதவி வழங்கும் நிறுவனங்கள் செயற்பாட்டு அறிவுறுத்தல்களை இந்த கட்டத்தில் மாற்றுவதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கவில்லை.

2.6.3 முறிவடைத்தலுக்கான சட்டம்

கூட்டு முறிவடைத்தலுக்கான சட்டத்தின் கூட்டு சட்டச் சீர்திருத்தல்கள் மீதான அமைச்சரவை அலுவலகத்தினதும் பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் பணிப்புரையின் படியும் உரிய ஆவணங்கள் சட்டமா அதிபரின் கருத்தினை பெற்றுக்கொள்ள சமர்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.6.4 பாலியல் சார்ந்த வன்முறை தொடர்பான செயற்பாட்டுத்திட்டம்.

பொருளாதார விவகாரங்களின் மீது விசேட கவனத்தை செலுத்தும் வகையில் பாலியல் சார்ந்த வன்முறை தடுப்புத்திட்டம் ஒன்றை துறைசார்ந்து உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாலியல் சார்ந்த வன்முறையினை விபரிக்கும் வகையில் தேசிய வேலைச்சட்டகத்தின் பொருளாதார அபிவிருத்தி திட்டமும் மற்றும் தேசிய செயற்பாட்டு திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.6.5 புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

இந்த அமைச்சினால் இலங்கை அரசாங்கத்தினால் மற்றைய நாட்டுத் தலைவர்களுடன் கைசாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் முன்னேற்றத்தை மீள்பார்வை செய்து ஜனாதிபதி செயலகத்திற்கு அறிக்கை இடப்பட்டுள்ளது.

2.6.6 முதலீட்டு சந்தை அபிவிருத்தி

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படும் முதலீட்டு சந்தை அபிவிருத்தி தொடர்பான தந்திரோபாயத்தை ஒருங்கிணைத்தல்.

2.6.7 நுண்நிதிச் சட்டவரைவு

2016 இன் இல 06 இன் படியான நுண்நிதி சட்ட வரைவின் உருவாக்கம் செயல்படுத்தலானது நுண்நிதி வர்த்தகத்தில் ஈடுபடும் கம்பனிகளின் மீதான அனுமதிபத்திரம் வழங்கல் ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு என்பனவற்றை கொண்டுள்ளது. அரசு சாரா நிறுவனங்களை வரையறுத்த சேமிப்புவைப்புகளை ஏற்றுக்கொள்ளும் நுண்நிதி அரசு சாரா நிறுவனங்கள் ஆக பதிவு செய்தல், நுண்நிதி அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நுண்கடன் அரசு சாரா நிறுவனங்களின் ஒழுங்கு நிதி மற்றும் கண்காணிப்பு

என்பவற்றுக்கான நியமங்களை உருவாக்கலும் தொடர்பட்ட அல்லது தேவைப்பட்ட விடயங்களை வழங்கலும், பிரதமரின் அலரி மாளிகை அலுவலகத்தின் மற்றும் இலங்கை மத்திய வங்கி, அரசு சாரா நிறுவனங்களின் செயலகம் மற்றும் பொருத்தமான நிறுவனங்களின் தேசிய செயற்பாட்டு அறை ஊடாக செயற்படுத்தலின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் தொடர் நடவடிக்கை எடுத்தலும் மேற்கொள்ளப்பட்டது.

2.6.8 புதிய பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை பதிவகச் சட்டம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையிற்கு நிதியளிப்பு செய்தலை மேம்படுத்த புதிய பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை பதிவக சட்ட 2016 உருவாக்கம், அசையும் ஆதனங்களில் உள்ளவாறன பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை ஒழுங்குக்கான நிறுவன வேலைச்சட்டகம் ஒன்றுக்காக பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை பகிவிற்கான அதிகாரசபை உருவாக்குதலுக்கான ஒரு சட்டம், அந்த அதிகார சபைக்கான அதிகாரங்களையும் கடமைகளையும் உருவாக்கல், அசையும் ஆதனங்கள் மீதான கடன் பெற்றவர்களின் பேரில் பாதுகாப்பு உரிமைக்காக செயற்படும் கடன் வழங்குநர்களின் முன்னுரிமைக்களுக்கான தீர்மானத்தை வழங்கல், பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கையுடன் தொடர்பானவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை உருவாக்கல், அசையும் ஆதனம் தொடர்பாக பாதுகாப்பு உரிமைகள் பதிவகம் ஒன்றை உருவாக்கலும் பேணுதலுடன் தொடர்புள்ள அல்லது ஏற்படக்கூடிய விடயங்கள் தொடர்பாக பேணலும்.

மேற்காணப்பட்ட சட்டத்தின்படி கீழ்கூறப்பட்ட சட்டங்கள் பின்வரும் அமைச்சுகளினால் திருத்தப்படுவது செயல் முன்னேற்றத்திலுள்ளது.

சட்டங்கள் / ஒழுங்கு நிதிகள்	**அமுல்படுத்தும் அமைச்சு**
ஆவண ஒழுங்குவிதி பதிவு	உள்நாட்டு விவகார அமைச்சு
ஈடுவைக்கும் ஒழுங்கு விதி	தொழில்துறை அபிவருத்தி அமைச்சு
நம்பிக்கை பெறுகை ஒழுங்கு விதி	நீதி அமைச்சு
விபரமளிப்பு ஒழுங்கு விதி	நீதி அமைச்சு
நிதி இத்தகை சட்டம் இல. 56/2000	நிதி அமைச்சு
உள்நாட்டு நம்பிக்கை பெறுகை சட்டம் இல 14/1990	நிதி அமைச்சு
கம்பனகள் சட்டம் இல. 7/2007	கைத்தொழில் மற்றறும் வர்த்த அமைச்சு

அட்டவணை 2.5: புதிய பாதுகாக்கப்பட்ட பரிவர்த்தனை பதிவகச் சட்டம்

2.6.9வருடாந்த அறிக்கைகளும் முன்னேற்ற அறிக்கைகளும்

முன்னேற்ற அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

1. SEC – 2014 ஆம் ஆண்டுக்கான
2. ETF – 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கான
3. NITF – 2014 ஆம் ஆண்டுக்கான
4. CBSL – 2014 ஆம் ஆண்டுக்கான
5. PUCSL – 2014 ஆம் ஆண்டுக்கான

2.6.10 வேறு செயற்பாடுகள்

- **இளைஞர் பாராளுமன்ற தேர்தல் 2015மீதான அறிக்கை:** 2015 இளைஞர் பாராளுமன்றத்தின் தேர்தல்களில் தொடர்பாக இடம் பெற்ற முறைக்கேடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **CCEM :** பொருளாதார விவகாரங்கள் பிரிவு தொடர்பாக CCEM இன் தீர்மாணம் தொடர்பான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **காலரீதியான முன்னேற்ற மீளாய்வு :** குறித்த நிறுவனங்களில் கால நீதியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை ஒழுங்கு செய்ததுடன் கால ரீதியான முன்னேற்ற அறிக்கைகளை பெறுதலுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முன்னேற்ற அறிக்கை தயாரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2.7 அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள்

2.7.1 உலக உணவுத்திட்டம் (WFP) 2016-2017

உலக உணவுத்திட்டத்தின் உதவி செயற்பாடுகள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மீதான இலங்கையின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் தொடர்வதுடன் வடக்கு, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 12 மாவட்டங்களின் மிகவும் நலிவடைந்த மக்களினால் பெற்றுக்கொள்ளகூடிய உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளின் மீது இத்திட்டமானது அதிக கவனம் செலுத்துகின்றது. இந்த நிகழ்ச்சி திட்டமானது முறையே 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் நாட்டுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியமான கூறுகள் 2016-2017

இந்த திட்டத்தின் கீழ் 04 முக்கிய கூறுகள் உள்ளன.

1. **நலிவடைந்த பிரிவினருக்கான ஊட்டச்சத்து ஆதரவு(NSVG)**

இக் கூறின் கீழ் போசாக்கின்மை மிகவும் அதிகமாக காணப்படக்கூடிய தெரிவு செய்யப்பட்ட புவியியல் பிரதேசங்களில் தற்போதுள்ள சுகாதார சேவைகளுடன் இலக்கிடப்பட்ட குறைநிரப்பு வழங்கல் முலமாக காணப்படக்கூடிய கடும் போசாக்கின்மைக்கான நடவடிக்கையானது ஓருங்கிணைக்கப்புடும். திட்டக் காலப்பகுதியில் 06 மாதத்திலிருந்து 59 மாத வயது உடைய 57,000 பிள்ளைகள் மேலும் 33,000 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 57.592 மெற்றிக் தொன் உணவானது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15,257 பிள்ளைகள் மற்றும் 8,071 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. **பாடசாலை உணவுத்திட்டம் (SMP)**

பாடசாலை உணவுத்திட்டம் தரம் 1 இல் இருந்து 9 வரையான 160,000 பாடசாலை மாணவர்களுக்கு தினமும் ஊட்டச்சத்தான உணவு வழங்குகிறது. ஓவ்வொரு மாணவருக்கும் அரிசி, பருப்பு, மரக்கறி எண்ணெய், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் மரக்கறி உள்ளடங்கலாக மதிய உணவு வழங்கப்படும். எனினும் 152,365 மாணவர்கள் வட பகுதியில் காணப்படக்கூடிய சில கலாசார மற்றும் சமூக கட்டமைப்பு காரணமாக இத்திட்டத்தில் பங்குபற்றினார்கள்.

3. **எதிர்பாரா நிகழ்வுகளினால் ஏற்படும் இடர்கள் மற்றும் பாதிப்புக்களிலிருந்து நின்றுநிலைக்கும் தன்மையை கட்டியொழுப்பல். (RB)**

இந்த திட்டமானது வடக்கு, ஊவா, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள பேரழிவு பாதிப்புள்ள மற்றும் உணவு பாதுகாப்பற்ற பகுதிகள் மீது கவனம் செலுத்துவதுடன் உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலப்புனர்வாழ்வு மற்றும் நீர் பெறுகை போன்ற பல்வேறுபட்ட முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உட்பட குறைந்தளவு ஆற்றலுள்ள குடும்பங்கள் இதன் முலம் பயன் பெறுவார்கள். சொத்து உருவாக்க நடவடிக்கை ஊடாக நின்றுநிலைக்கும் தன்மையை கட்டியெழுப்ப பண பரிமாற்றமானது பயன்படுத்தப்படும். இந்தத்திட்டத்தின் 2,996 மக்கள் இத்திட்டத்தின் கீழ் 2016 இல் பயன் அடைந்தார்கள்.

4. **அவசர செயல்பணி. (EMOP)**

கொழும்பு, கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் உணவு பெற்றுக்கொள்வதற்காக பணம் வழங்கி ஆதரவு அளிக்க இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் ரூபா 152 மில்லியன் 22,949 பயனாளிகளுக்கு (7364 குடும்பங்கள) மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

ஒவ்வொரு கூறின் கீழும் பயன் பெற்ற மொத்த பயனாளிகள்



2016 முடிவில் உள்ளபடியான திட்டமிடப்பட்ட மற்றும் பயன் பெற்ற பயனாளிகள் தொடர்பான ஒப்பீடு.



2.7.2 அமெரிக்க நிதி உதவி கருத்திட்டங்கள்

அமெரிக்க உதவி திட்டங்கள் இலங்கை மற்றும் அமெரிக்க அரசாங்கங்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நாடத்தப்பட்டு வருகின்றான. அமெரிக்க உதவி திட்டத்திக் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி மற்றும் VAT கூறுக்களை விலக்களிக்கும் கடப்பாட்டிலுள்ளது. தற்போது இந்த திட்டத்தின் கீழ் 03 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

- நிபுணர் மற்றும் நிறுவன திறன் மேம்படுத்தும் திட்டத்திற்கான ஆதரவு. (SPICE)
- வாழ்வாதார அபிவிருத்தி திட்ட வாய்ப்புக்களுக்கான ஆதரவு. (SOLID)
- புதிய பொருளாதார வளர்ச்சித்திட்டம். : VEGA BIZ+

I. நிபுணர் மற்றும் நிறுவன திறன் மேம்படுத்தும் திட்டத்திற்கான ஆதரவு. (SPICE)

2012 - 2017

இதன் முக்கிய நோக்கங்களாக நிறுவன வளர்ச்சிக்கான ஆதரவு, உள்நாட்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள நிறுவனங்கள் மற்றும் சமுகங்களுக்கு இடையே இணைப்புகளை உருவாக்கல் ஊடாக ஜனநாயக மற்றும் நல்லாட்சியை ஊக்கமளிக்க சுதேச நிறுவனங்களின் ஆற்றலை வலுப்படுத்துவது என்பன உள்ளன.

மொத்த USAID முதலீடு ஆக அமெரிக்க டொலர் 15,182,000 (ரூபா மில்லியன் 2,277) உள்ளதுடன் பின்வரும் நடவடிக்கைகள் இந்த திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

- USAID இன் பிரதான பொது சமூகத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகள்
- 66 தேசிய மற்றும் பிராந்தியம் சார்ந்த உள்ளூர் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கல்.
- ஓரங்கட்டப்பட்ட மக்கள் தொகையினர் மற்றும் பொது மக்கள்சார் சமூக அமைப்புக்களுக்கான நிகழ்ச்சித்திட்டமிடலில் அபிவிருத்தி மற்றும் சேவைகள் வழங்கல் என்பனவற்றுடன். பெண்கள் மற்றம் இளைஞர்களின் வலுவூட்டல், செயல் திறனுள்ள குடியுரிமையுடனான உள்ளார்ந்த பங்குபற்றல், பல் மத மற்றம் இனங்களுக்குள்ளான இணக்கப்பாடு மற்றும் மேம்படும் பாலின சமத்துவம் என்பன உள்ளடக்கியதாக திட்டமானது கவனம் செலுத்துகின்றது.

42.816 தனிநபர்கள் சட்ட உதவி அல்லது பாதிக்கப்பட்டவருக்கான உதவியை பெற்றுக்கொண்டுள்ளதாக முன்னேற்றமானது அறிக்கையிடப்பட்டுள்ளது. 3,688 மக்கள் பாலினம் சார்ந்த வன்செயல்களுக்கான சேவைகள் மூலம் எட்டப்பட்டுள்ளனர். 1,118 போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வாழ்வாதார உதவியை பெற்றுக்கொண்டுள்ளார்கள். 36.815 மக்கள் அத்தியாவசிய அடையாள ஆவணங்கள் ஆன பிறப்புச்சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொண்டுள்ளார்கள். 64,251 மக்கள் மனித உரிமை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டார்கள். 1,389 சமுதாய உறுப்பினர்கள் பயிற்சிகளை பெற்றுள்ளார்கள். 248 நடவடிக்கைகள் அமைதி மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாக நடத்தப்பட்டுள்ளன. 2016 மார்கழி 31 ஆம் திகதியிலுள்ளவாறு 188 அமைப்புக்கள் பங்கேற்பு ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளர்கள்.

II. வாழ்வாதார அபிவிருத்தி திட்ட வாய்ப்புக்களுக்கான ஆதரவு. (SOLID) 2013-20136

நலிவுற்ற சமுதாயங்களின் (பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், யுத்த விதவைகள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்கள்) வாழ்வாதார வாய்ப்புக்களை அதிகரிக்க வரையறுக்கப்பட்ட உற்பத்தி உள்ளீடு உதவியுடன் சந்தை தொடர்புகள் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி ஊடாக விவசாயிகள் ஆதரவு அளிக்கப்பட்டார்கள்.

வடக்கு, வட மத்தி மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற பிரதேசங்களில் மொத்த USAID முதலீடு ஆக அமெரிக்க டொலர் 9.2 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 3,500 கிராமிய குடும்பங்கள் பயனாடைந்தனர். தனியார் துறை ஈடுபாடு இந்த திட்டத்தில் மிகவும் முக்கியமானது. புயிர் உற்பத்தி, பாற்பண்ணை மற்றம் கோழிப்பண்ணை போன்ற மூன்று பெறுமதிசார்துறைகள் முலம் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 1000 கால்நடை உற்பத்தியாளர்கள் 09 மாவட்டங்களில் உதவியளிக்கப்பட்டார்கள் மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவாளர் உறுதி செய்யபட்ட ஓர் இளைஞர் விவசாயிகள் அபிவிருத்தி முயற்சி முன்னோடித்திட்டத்தில் 48 விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

III. புதிய பொருளாதார வளர்ச்சித்திட்டம். : (VEGA BIZ+)

தோட்டத்துறை, பால் உற்பத்தி, மீன் வளர்ப்பு வசதியளிப்பு சேவைகள் நிர்மாணம் மற்றும் ஆடைகள் கைத்தொழில் போன்ற குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களின் உள்ளார்ந்த முகாமை நடைமுறைகள் மற்றும் உற்பத்தி செயல்முறை மேம்பாட்டுக்கு நன்கொடை அளித்தும் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி போன்றவற்றை வழங்கியும் பொது மற்றும் தனியார் துறைகளுடனான உள்ளுர் பங்குதார்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகின்றது.

வடக்கு, வட மத்தி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் போன்ற பிரதேசங்களில மொத்த USAID முதலீடு ஆக அமெரிக்க டொலர் 22,400,000 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் இரு கூறுகளாக நன்கொடையும் தொழில்நுட்ப உதவியும் காணப்படுகின்றது.

2016 மார்கழி 31 ஆம் திகதியிலுள்ளவாறு வெகாவிஸ்ஃ கருத்திட்டத்தின் முன்னேற்றம் வருமாறு:

- இக்காலாண்டுப் பகுதியில் 241 புதிய வேலை வாய்ப்புக்களும் வருமானத்தினை ஈட்டுவதற்கான சந்தர்ப்பங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்ட காலப்பகுதிக்கான மொத்த இலக்கான 6500 இலக்கு 6379 வருமானத்தினை ஈட்டுவதற்கான சந்தர்ப்பங்களை அடைந்து கொள்ளமுடிந்தது.
- மொத்த கருத்திட்ட இலக்காகிய ஐ.அமெ.டொலர் 17,500,000 முதலீட்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அமெ.டொலர் 16,191,985 பெறுமதியான முதலீட்டினை மேற்கொள்ள முடிந்தது. ஐ.அமெ.டொலர் 417,487 நிதியளிக்கப்பட்ட தொழில்கள் இக்காலப் பகுதிவரை செயற்படுத்த முடிந்தது.
- கருத்திட்டக் காலப்பகுதியின் மொத்த இலக்குப் பங்களிப்பாகிய ஐ.அமெ.டொலர் 614,000 இல் இருந்து இதுவரை ஐ.அமெ.டொலர் 523,933 பங்களிப்புச் செய்யமுடிந்ததுடன், பிஸ் ஃ ஆல் இக்காலண்டுப் பகுதியில் பங்குச் செலவாக ஐ.அமெ.டொலர் 56,533 பங்களிப்புச் செய்ய முடிந்தது.
- கருத்திட்ட காலப்பகுதியில், 3 மாதங்களைக் கொண்ட முடிவுறுத்தற் காலப் பகுதியின் ஒரு செயற்பாடாக பிற்ஸ் ஃ ஆல் 1,264 நாட்களை கொண்டதான தன்னார்வ ஆலோசனைச் சேவையை வழங்கமுடிந்தது.

- கருத்திட்டக் காலப்பகுதியில் உத்தேசிக்கப்பட் இலக்குகளாக 187 பயிற்சிகள் மற்றும் உதவி செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. தற்போதுவரை 184 பயிற்சிகள் மற்றும் உதவி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இச்செயற்பாட்டின் மூலம் 3000 தனிப்பட்ட பயனாளிகள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும் 3,765 தனிப்பட்ட பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர்.

2.7.3 "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" திட்டம்

இந்த திட்டம் ஜனாதிபதி செயலகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றது. குடிமக்கள் தமது குறைகளை / கோரிக்கைகளை இணையத்தளம் மூலம் எந்த நேரத்தி லும் நேரடியாக ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்ப முடியும்.
இந்த அமைச்சானது 324 குறைகளை பெற்றுள்ளதுடன் 186 குறைகள் 2016 டிசம்பர் மாத முடிவில் தீர்க்கப்பட்டுள்ளன. இதன் விபரங்கள் பினவரும் வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.



2.7.4 ஜனாதிபதி நடமாடும் சேவை

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் ஒன்றாக இணைந்து கிராமப்புற பகுதியிலுள்ள மக்களின் நிர்வாக ரீதியான மற்றும் தீவிரமான பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டு இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். முதலாவது நடமாடும் சேவை பொலன்னறுவை மாவட்டத்தில் நடைபெற்றது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு இலங்கை மத்திய வங்கி, சிறுதொழில் பிரிவு, தேசிய இளைஞர் படை மற்றும் தேசிய இளைஞர் மன்றத்தை இருந்து வந்த அலுவலகர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதில் முனைப்பாக செயல்பட்டார்கள்.

நடமாடும் சேவையின் போது 540 விசாரணை மனுக்கள் / கோரிக்கைகள் பெறப்பட்டு 467 தீர்வுகள் வழங்கப்பட்டன. இதன் விபரங்கள் பினவரும் வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.



அத்தியாயம் 03

இளைஞர் அலுவல்கள் நிறுவனங்களினது செயற்திறன்கள்

3.1 சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவு

2016 **திசெம்பர் 31 ஆந் திகதியில் முன்னேற்றம்**

	பிரதான செயற்பாடுகள்	வருடாந்த இலக்கு	2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முன்னேற்றம்		
			நிகழ்ச்சித் திட்டங்கள்	பங்களிப்பு	செலவினம்
1	அறிவுறுத்தல் மற்றும் உளப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்				
	பொதுவான அறிவுறுத்தல்	256	329	12,153	91,834.00
	விசேட அறிவுறுத்தல்	52	57	3,446	556,016.71
	நடமாடும் அறிவுறுத்தல்	11	22	897	184,523.34
	தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு தெரிவுசெய்தல்	39	32	702	292,860.00
	அலுவலர்களை அறிவுறுத்தல்	2	31	1,041	189,187.00
	தொழில்முயற்சி கண்காட்சிக்கு தெரிவு செய்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்		4	157	34,996.45
	விசேட உளப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	12	12	324	114,306.52
		372	**487**	**18,720**	**1,463,724.02**
2	தொழில்முயற்சி கருத்துகளை உருவாக்குதல் மற்றும் தெரிவுசெய்தல்				
	தொழில்முயற்சி கருத்துகளை உருவாக்குதல் மற்றும் தெரிவுசெய்தல	22	26	710	262,017.78
	சாத்தியக்கூறு கற்கை	4	11	236	84,283.92
		26	**37**	**946**	**346,301.70**
3	தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்				
	தொழில்முயற்சியின் புதிய செல்நெறிகள்	6	5	589	123,817.00
	தொழில்முயற்சிக்கு வழி - நிகழ்ச்சித் திட்டங்கள்	95	109	4,372	2,133,350.70
	தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	6	6	178	5,641,549.81
	தொழில்முயற்சிகளை பார்வையிடல் - (அனுபவங்களை பரிமாற்றிக்கொள்ளுதல்)	20	17	624	402,805.00
		127	**137**	**5,763**	**8,301,522.51**
4	தொழில்முயற்சி திட்டங்களின் அபிவிருத்தி				
	தொழில்முயற்சி திட்டங்களின் அபிவிருத்தி (03 நாட்கள்)	18	18	441	368,578.00
	தொழில்முயற்சி திட்டங்களின் அபிவிருத்தி (05 நாட்கள்))	1	2	48	80,692.00
		19	**20**	**489**	**449,270.00**
5	தொழில்நுட்ப அபிவிருத்தி				
	தனி நபர் பயிற்சி	15		46	316,218.50
	தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	59	70	2487	1,623,058.30
		74	**70**	**2,533**	**1,953,076.80**
6	முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்				
	முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்	48	50	1,169	1,175,803.88
	உங்களது தொழில்முயற்சி முகாமைத்துவத்திற்கு	10	8	239	197,720.00

	புதிய முகாமைத்துவ முறைமைகள்	1	1	29	8,300.00
		59	**59**	**1,437**	**1,381,823.88**
7	சந்தைப்படுத்தல் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்				
	சந்தைப்படுத்தல் அபிவிருத்தி	17	16	434	300,677.50
	வாடிக்கையாளர் சேவை	16	16	704	174,505.00
	தொழில்முயற்சி அனுபவங்களை பரிமாற்றிக்கொள்ளுதல்	12	10	566	230,885.00
	விற்பனையாளர் கொள்வனவு செய்பவர் சந்திப்பு (முன் வருகை)		1	20	9,200.00
	சந்தைப்படுத்தல் தொடர்புகளின் விருத்தி	6	6	371	125,047.08
	சந்தைப்படுத்தல் ஆற்றல்களின் அபிவிருத்தி	2			
	வர்த்தக சந்தையில் பங்குபற்றும் தொழில்முயற்சியாளர்களின் பொருட்டு விசேட சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		1	62	5,610.00
	வர்த்தக சந்தை / கண்காட்சி	43	32	1,270	6,123,886.44
	மாதாந்த சந்தை		34	569	
		96	**82**	**3,427**	**6,969,811.02**
8	கடன் வசதி வழங்குதல்				
	தொழில்முயற்சி நிதியிடல் ஒருங்கிணைப்பு	10	12	725	157,984.43
	வங்கி ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	1	2	66	11,791.00
	கடன் வழங்கும் ஒருங்கிணைப்பு		1	115	10,887.00
		11	**15**	**906**	**180,662.43**
9	தொழில்முயற்சி சட்டங்கள் , ஒழுங்குவிதிகள்				
	தொழில்முயற்சி ஆலோசனைகள்	8	7	422	275,466.18
	தொழில்முயற்சி சட்டங்கள், ஒழுங்குவிதிகள் என்பன அறிவுறுத்தல்	9	10	410	128,720.00
		17	**17**	**832**	**404,186.18**
10	தரத்துடன்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்				
	உற்பத்திதிறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	2	1	33	54,588.23
	பொதியிடல் நிகழ்ச்சித் திட்டங்கள்	11	10	312	138,564.00
	புஆ சான்றிதழ் பெறுதலை ஒருங்கிணைத்தல்	1			
	பட்டைக் குறிமுறை (டீயச உழனந) தொடர்பான அறிவுறுத்தல்		1	40	11,545.00
	விசேட ஊக்கமளித்தல் நிகழ்ச்சித் திட்டம்		1	15	4,118.00
	ஏஞ சான்றிதழ் பெற்றுக்கொள்வதனை ஒருங்கிணைத்தல்	14	14	751	218,413.50
	தர நியம நிகழ்ச்சித் திட்டங்கள்	4	4	96	49,061.00
	நிலத் திட்டம் தயாரித்தல்	1			
		33	**31**	**1,247**	**476,290.00**
11	விலையிடல் மற்றும் கணக்கியல்				
	விலையிடல்	21	18	385	213,214.00
	கணக்கியல் (சாதாரண)	15	13	310	347,083.84
	கணக்கியல் (தென யன மங்)	4	5	105	104,547.00
		40	**36**	**800**	**664,844.84**
12	தகவல் தொழில்நுட்பம்				
	தகவல் தொழில்நுட்பம்	19	18	419	745,395.00
	இணையத் தளம் மற்றும் இணையத் தள பயன்பாடு	1	1	18	7,660.00
		20	**19**	**437**	**753,055.00**

13	மனித வளங்களின் அபிவிருத்தி				
	மனித வளங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	5	4	141	65,798.00
	ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	8	6	172	43,586.60
		13	**10**	**313**	**109,384.60**
14	மதிப்பிடல் நிகழ்ச்சித் திட்டங்கள்				
	தொழில்முயற்சி அமைப்புகளின் அபிவிருத்தி	50	47	3,175	450,656.60
	அழகுகலை அமைப்புகளின் அனுசரணை நிகழ்சித் திட்டம்		2	240	35,800.00
	அமைப்புகளின் செயற்பாடுகளை மதிப்பிடும் நிகழ்ச்சித் திட்டங்கள்	7	15	839	106,350.00
	சிறந்த தொழில்முயற்சியாளரை தெரிவு செய்தல்	9	8	779	1,116,219.33
	சிறந்த தொழில்முயற்சியாளரை தெரிவு செய்தல் (முன்னாய்வு)		2	12	28,002.72
	அமைப்புக்களின் உறுப்பினர்களை விசேடமாக அறிவுறுத்தல்		1	24	10,290.00
	அமைப்புக்களின் கூட்டங்கள்		98	3,355	
		66	**75**	**5,069**	**1,747,318.65**
15	தொடர் நடவடிக்கைகளும் கருத்திட்டங்களை பார்வையிடலும்				
	தொடர் நடவடிக்கைகள்	248	253	4,720	938,856.87
	கருத்திட்டங்களை பரீட்சித்தல்	215	205	3,363	2,267,341.67
	அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்		9	388	1,857,544.50
உலகச் சூழலில் வளமிக்க நாடொன்றை உருவாக்கும் பொருட்டு தந்திரோபாயத் தலைமையின் கீழ் அர்ப்பணம்மிகு அலுவலர்களின் சேவைப் பயன்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பனவற்றின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் புள்ளிவிபரங்களை சரியாகவும் துரிதமாகவும் வழங்கி நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்குதலே இதன் செயல்நோக்காகும்.

4.3.2 2016 ஆம் ஆண்டினுள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான விடயங்களின் சாராம்சத் தகவல்கள்

❖ **மக்களியல் சுகாதார அளவீடு**

இலங்கையில் மக்களியல் சுகாதார அளவீடு முதன்முறையாக கணினி உதவியுடனான நேர்காணல் முறை (CAPI) மூலம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீடானது சர்வதேச ஆலோசனை சேவையுடன் சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, நடாத்தப்பட்டது.. இவ்வளவீட்டு நடவடிக்கைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் களத்தில் தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் என்பன பூர்த்தியடைந்துள்ளது. அத்துடன் ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தரவுகள் வெளியிடும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகிறது.

Tablet ; கணினியுதவியுடனான நேர்காணல்

❖ **மக்களியல் புள்ளிவிபரங்கள்**

பாராளுமன்றம், அரச துறையின் பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், அரசசார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் போன்றோரிடமிருந்தான விண்ணப்பத்திற்கிணங்க தொகைமதிப்புத் தரவுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 இன் அடிப்படையில் வாழ்வியற் தரவு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2021 இற்கான தொகைமதிப்புக் கண்ட அளவைத் தீர்மானித்தல்(நகர, கிராம பிரிவுகளுக்கு) மற்றும் திருத்தங்களுக்குட்பட வேண்டிய 210 தொகைமதிப்புக் கண்டங்களை இனங்காணுதல் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் முன்நிரற்படுத்தலின் 78 படிவங்கள் இற்றைப்படுத்தல் பொருட்டு களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

❖ **பாலர் பாடசாலை சம்பந்தமான தொகைமதிப்பு - 2016**

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வேண்டுகோளிற்கு இணங்க, இத்தொகைமதிப்பை நடத்துவதற்கு எமது திணைக்களத்திடமிருந்து தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

❖ இலங்கையின் தேசிய கணக்குகள்

2010 ஐ அடிப்படை வருடமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி அடங்கலாக சகல நுண் பொருளாதாரக் குறிகாட்டிகளையும் 'உற்பத்தி', 'வருமானம்', 'செலவினம்' ஆகிய அணுகுமுறையின் கீழ் 2015 ஆம் ஆண்டு, 2015 4ஆம் காலாண்டு, 2016 இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டு தொடர்பில் வெளியிடப்பட்டதுடன் தேசிய கணக்குகள் மதிப்பீட்டிற்காக 2010 அடிப்படை வருடத்தின் கீழ் முதல் தடவையாக தேசிய கணக்குகள் வருடாந்த அறிக்கை (2015) தயாரிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளினுடாக பெறப்படும் பொருட்கள், சேவைகளின் முடிவு, இடைநிலை, இறுதி நுகர்வு, ஏற்றுமதி, இறக்குமதி, மொத்த மூலதனவாக்கம் போன்றவற்றின் விரிவான தகவல்களை வழங்கும் "வழங்கலும் பயன்பாடும் அட்டவணை"இற்றைப்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2010 இற்கான உள்ளீடு மற்றும் வெளியீடு அட்டவணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

சார்க் மாநாட்டுக்குத் தேவையான தரவுகள் வழங்குதல், சார்க் நாடுகளின் தேசிய கணக்குத் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை தயாரித்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வழங்குதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

சுட்டெண்	2012	2013	2014	2015
நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி(ரூபா) (மில்லியன்)	8,732,463	9,592,125	10,448,479	11,183,220
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%)	9.1	3.4	4.9	4.8
தனி நபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா)	427,559	466,112	503,032	533,398
தனி நபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர)	3,351	3,610	3,853	3,925
தனி நபரின் மொத்த தேசிய வருமானம் (ரூபா)	419,975	455,126	491,638	521,412
தனி நபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர)	3,291	3,525	3,766	3,837
தனி நபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (அ.டொலர) (%)	3.8	7.7	6.7	1.9
தனி நபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர்) வளர்ச்சி (%)	2.9	7.1	6.8	1.9
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளார்ந்த சுருக்கி (2002=100)	115	122	127	130
வருடாந்நத சராசரி விலை மாற்றம் (மொத்த உள்நாட்டு உற்பத்தி உள்டக்கி சுருக்கி) (%)	10.8	6.2	3.9	2.1

அட்டவணை 4.5 : வருடாந்தத் தேசிய கணக்கு மதிப்பீடுகளின் பிரதான சுட்டெண்கள் 2012-2015 (2010 அடிப்படை வருடம்)

❖ விலைச் சுட்டெண்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் மிக அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2015 ஒக்ரோபரில் இருந்து உரிய கலண்டர் மாதம் முடிவடைந்து 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடப்படுகிறது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2012/13 இல் நுகர்வோர் செலவின் அடிப்படையிலான நிறைகளைக் கொண்டிருப்பதுடன் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளையும் பிரதிபலிக்கின்றது.

இச்சுட்டெண்ணிற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் நகரத்திலுள்ள 03 விலை சேகரிப்பு நிலையங்களிலிருந்து சந்தைக் கூடையிலுள்ள ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடும் அளவீடாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், ஒக்டோபர் 2015 இலிருந்து பயன்படுத்தப்படுகிறது.
அத்துடன் திணைக்களத்தால் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணும் கணிப்பிடப்படுகிறது.

2015 மற்றும் 2016 ஜனவரி மாதத்திலிருந்து தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அசைவுகள், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள், உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் அசைவுகள் என்பன அட்டவணைகள் II,III,IV இல் முறையே காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை II: தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013 = 100) இன் அசைவுகள்

மாதம்	சுட்டெண்	
	2015	2016
ஜனவரி	112.8	112.0
பெப்ரவரி	108.9	110.8
மார்ச்	107.6	110.0
ஏப்ரல்	107.0	111.6
மே	108.0	113.7
ஜூன்	109.1	116.1
ஜூலை	108.9	115.2
ஆகஸ்ட்	108.4	113.3
செப்டம்பர்	108.4	113.5
ஒக்டோபர்	109.2	114.7
நவம்பர்	112.0	116.6
டிசம்பர்	113.2	118.0

அட்டவணை III: கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2006/2007 = 100) இன் அசைவுகள்

மாதம்	சுட்டெண்	
	2015	2016
ஜனவரி	183.2	184.9
பெப்ரவரி	178.9	183.8
மார்ச்	178.1	181.7
ஏப்ரல்	178.5	184.1
மே	179.8	188.5
ஜூன்	181.6	192.5
ஜூலை	182.8	192.9
ஆகஸ்ட்	181.9	189.1
செப்டம்பர்	181.4	188.5
ஒக்டோபர்	182.1	189.7
நவம்பர்	184.7	190.9
டிசம்பர்	185.2	192.8

அட்டவணை IV: உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (அடிப்படை 2013 Q4 = 100) இன் அசைவுகள்

மாதம்	சுட்டெண்	
	2015	2016
ஜனவரி	107.3	103.7
பெப்ரவரி	103.2	105.8
மார்ச்	101.9	101.4
ஏப்ரல்	102.9	102.6*
மே	105.8	104.8*
ஜூன்	105.5	107.0*
ஜூலை	107.2	108.2**
ஆகஸ்ட்	105.3	106.2**
செப்டம்பர்	105.8	107.5**
ஒக்டோபர்	104.7	
நவம்பர்	106.3	
டிசம்பர்	107.2	

*குறிப்பு: * திருத்தப்பட்ட ** தற்காலிக*

❖ இலங்கைத் தொழிற்பல அளவீடு – 2016

இலங்கைத் தொழிற்பல அளவீடு, இலங்கையிலுள்ள வேலையிலுள்ளோர், வேலையற்றோர் மற்றும் தொழிற்பலம் என்பனவற்றின் மட்டங்கள், போக்குகளை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிற்பல அளவீடு, 1990 இலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்படுவதுடன் இதன் மூலம் வருடாந்த, காலாண்டுத் தரவுகள் வெளியிடப்படுகின்றன.

தெழிற்பல அளவீட்டின் கள நடவடிக்கைகள் நான்கு காலாண்டிற்கும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உரிய கால அட்டவணைக்கேற்ப தரவுகள் கணனிப்படுத்தல், பதிப்பித்தல் நடவடிக்கைகள் மாவட்ட அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் செம்மை பிரிவின் ஊடாகச் சரிபார்க்கப்பட்டது. அத்துடன் காலாண்டு அறிக்கை தயாரித்தல், வெளியிடல் மற்றும் இணையத்தில் பிரசுரித்தல் என்பன உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

கொரிய அரசின் நிதி உதவியின் கீழ், KOSTAT நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக tablet கணனிகளைப் (CAPI முறையின் கீழ்) பயன்படுத்தி இலங்கைத் தொழிற்பல அளவீட்டின் கள நடவடிக்கைகளை 2017 இலிருந்து மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டமிடல், முன்னோடி அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் கள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ குடித்தன வருமான, செலவின அளவீடு – 2016

குடித்தன, வருமான , செலவின அளவீடு நாட்டின் வாழ்க்கைத் தர மட்டங்களை அளவிடும் பொருட்டு குடித்தன வருமானம் மற்றும் நுகர்வுச் செலவினம் சம்பந்தமான தகவல்களை வழங்கும் நோக்கில் 3 வருடங்களுக்கொருமுறை நடத்தப்படுகிறது. இவ்வளவீடு வறிய குடித்தனங்களை இனங்காணுவதற்கும் அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களிற்கும் தகவல்களை வழங்குவதற்கும் வறிய குடித்தனங்களை மேம்படுத்தல் மற்றும் தேசிய தீர்மானங்கள் எடுத்தல் என்பனவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல் பொருட்டும் முக்கியமானதாகும்.

குடித்தன, வருமான, செலவின அளவீட்டின் நான்காம் காலாண்டு வரை கள வேலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. தரப்பட்ட கால அட்டவணைக்கேற்ப தரவுகள் கணனிப்படுத்தல் வேலைகளை மாவட்ட அலுவலகங்களில் பூர்த்தியடைந்துள்ளதுடன் தரவுகளைக் பதிப்பித்தல், திருத்தல் என்பனவும் பூர்த்தியடைந்துள்ளன.

❖ சிறுவர் செயற்பாட்டு அளவீடு – 2016

சிறுவர் செயற்பாட்டு அளவீடு 5 – 17 வயதுடைய சிறுவர்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு நடத்தப்படுகிறது. தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன் இவ்வளவீடு நாடளாவிய ரீதியில் 25000 வீட்டுக் கூறுகளை மாதிரியாகப் பயன்படுத்தி 2016 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2016 மே மாதமளவில் அளவீட்டின் கள நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகளின் கணனிப்படுத்தல், பதிப்பித்தல் வேலைகள் முடிவடைந்து, இறுதித் தரவுகளின் மதிப்பீட்டு அட்டவணைகள் சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு வழங்கப்பட்டதுடன் இறுதி அறிக்கையின் பகுப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

❖ புள்ளிவிபர கொள்ளளவைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கை நிதியம்

இது ஒரு உலக வங்கி நிதியளிக்கும் வேலைத்திட்டமாகும். இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இரு ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன.

- குடித்தன வருமான, செலவின அளவீட்டுத் தரவு சேகரிப்புக்காக CAPI முறையைப் பயன்படுத்தி முன்னோடி அளவீட்டை நடத்துவதற்கான ஆலோசனைச் சேவை வழங்குதல்
- குடித்தன வருமான, செலவின அளவீட்டு திட்டமிடலை மேம்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவை வழங்குதல்

இவ்விரு ஆலோசனைச் சேவைகளிற்கும் வெளிநாட்டு ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்டு அலுவலர்களைப் பயிற்றுவித்தல் பூர்த்தியடைந்துள்ளன.

அத்துடன் இவ்வேலைத்திட்டத்தின் கீழ், கள நடவடிக்கைக்கான ஏற்பாடுகளின் கீழ் 90 tablet கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

❖ நெற்பயிரின் விளைவு மதிப்பு அளவீடு

2015/16 பெரும் போகம், 2016 சிறுபோகம் என்பவற்றிற்கான பயிரிடப்பட்ட பரப்பளவு சராசரி விளைச்சல் மொத்த உற்பத்தி மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டது. 2015/16 பெரும் போகம், 2016 சிறுபோகம் என்பவற்றிற்கான ஒவ்ஒரு மாவட்டங்களிலும் நெல் பயிரிடப்பட்ட முறையில் ஏக்கர் /ஹெகடேயரில் நெல் விளைச்சலை மதிப்பிடும் பொருட்டு இவ் அளவீடு மேற்கொள்ளப்படுகின்றது.

❖ உருளைக் கிழங்கு உற்பத்தி மதிப்பீட்டு அளவீடு – 2016

இவ்வளவீட்டினூடாக, 2016 இல் நாட்டின் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படும் நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் பி.செ.பிரிவு ரீதியாக உருளைக்கிழங்கு அறுவடை சம்பந்தமான தகவல்களைப் பெறும் நோக்கில் நிலப்பரப்பளவு, எதிர்பார்க்கும் அறுவடை சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

❖ விவசாய உற்பத்தி சம்பந்தமான அளவீடு – 2016/17

விவசாய காணிகளின் கட்டமைப்பு சம்பந்தமாக ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வருடம் புதியதொரு அளவீட்டை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன் கீழ் விவசாயத் துறையைச் சார்ந்த வீட்டுக் கூறுகளின் மக்களியல் தகவல்கள், நிலப்பயன்பாடு பயிர்ச்செய்கை அமைப்பு, கால்நடை வளர்ப்பு, பயிர்ச்செய்கை உற்பத்திச் செலவினம், இருப்புக்களின் தொகை என்பன சம்பந்தமான தகவல்களைச் சேகரிப்பதற்கு இவ்வளவீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அளவீட்டுக்கான படிவம் தயாரிக்கும் மற்றும் அளவீட்டினை மேற்கொள்ளும் முறை தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

❖ பெரிய வெங்காய உற்பத்தி மதிப்பீட்டு அளவீடு – 2016

இவ்வளவீட்டின் ஊடாக 2016 இல் பெரிய வெங்காயம் செய்கை பண்ணப்படும் அனுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் பிரதேச செயலக பிரிவு ரீதியாகவும் மகாவலி எச் வலயத்தினுள் அலகு முகாமைப் பிரிவு ரீதியாகவும் பெரிய வெங்காயம் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பளவு, எதிர்பார்க்கப்படும் அறுவடை சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

❖ கால்நடைப் புள்ளிவிபரங்கள் சேகரித்தல் - 2016

2016 இல் கால்நடைப் புள்ளிவிபரங்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் கால்நடை வளர்க்கும் வீட்டுக்கூறுகள், அரச, தனியார் பண்ணைகளுக்குச் சென்று தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக பசுக்கள், எருமைகள், ஆடுகள், செம்மறியாடுகள், பன்றிகள், கோழிகள், வாத்துகள், போன்ற விலங்குகளின் தொடர்பில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் பி.செ.பிரிவு ரீதியிலும் மாவட்ட மட்டத்திலும் தயாரித்து, 2016 ஆம் ஆண்டின் பொருட்டு மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு விலங்குகளினதும் எண்ணிக்கை, பால், முட்டை உற்பத்தி என்பன சம்பந்தமான மதிப்பீடுகளும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் இறைச்சிக்காகக் கொல்லப்படும் விலங்குகளின் புள்ளிவிபரங்களும் தேயிலை, றப்பர், தெங்கு உற்பத்திச் செலவின அளவீட்டில் இருந்து உரிய உற்பத்திச் செலவினத் தரவுகளும் வழங்கப்பட்டன.

❖ கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

2016 இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டிற்கான உற்பத்திச் சுட்டெண் தயாரிக்கப்பட்டு அதன் அறிக்கை வெளியிடப்பட்டது.

❖ கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு

கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி மட்டம், மூலப்பொருட் பயன்பாடு, உள்வீடு, வெளியீடு, உழைப்பு, வேலை செய்வோர் என்பன சம்பந்தமான காலத்தோடு ஒத்த தகவல்களைப் பெறும் பொருட்டு இவ்வளவீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2015 நான்காம் காலாண்டு, 2016 இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுக்கான வளர்ச்சிச் சதவீதம் மதிப்பிடப்பட்டு தேசிய கணக்குகள் தயாரித்தலுக்குத் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டதுடன் 2016 முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுக்கான கள நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

❖ வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் அளவீடு – 2015

அளவீட்டிற்குரிய கள நடவடிக்கைகளும் தரவுகள் கணனிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டதுடன் இறுதி அறிக்ஐக வெளியிடப்பட்டுள்ளது.

❖ வருடாந்தக் கைத்தொழில் அளவீடு – 2015

அளவீட்டிற்குரிய கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தரவுகள் கணனிப்படுத்தலும் பூர்த்தி செய்யப்பட்டது. தற்போது இறுதி அறிக்கை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் 2016 வருடாந்தக் கைத்தொழில் அளவீட்டின் கள நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளன.

❖ அரச. அரச சார்புத்துறை பணியாளர்கள் சம்பந்தமான தொகைமதிப்பு

அரச, அரச சார்புத்துறைப் பணியாளர்கள் சம்பந்தமான தொகைமதிப்புத் தொடரின் 8 ஆவது தொகைமதிப்பு 2016 நவம்பர் 17ம் திகதி அரச மற்றும் அரச சார்புத் துறையின் சகல நிறுவனங்களையும் உள்ளடக்கி நடத்தப்பட்டது. 1980 இல் தொகைமதிப்புத் புள்ளிவிபர திணைக்களத்தால் முதலாவது அரச துறைப் பணியாளர்களின் விரிவான தரவு சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன்பின்னர் 2006 வரை ஒவ்வொரு 4 - 5 வருடங்களுக்கொரு முறை இத்தொகைமதிப்பு நடத்தப்பட்டது. 10 வருடங்களின் பின் இம்முறை நடைபெறும். இத்தொகைமதிப்பில் அரச. அரச சார்புத் துறை நிறுவனங்களில் நிறுவனங்களின் சொத்து, அதாவது நிறுவனங்களுக்குரிய காணி. கட்டடம், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான சாராம்சத் தகவல்களை நிரற்படுத்துதலும் மேற்கொள்ளப்படும். தற்போது இத்தொகைமதிப்பிற்குரிய 60% ஆன சாராம்ச அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன் ஏனையவை பெறப்படவுள்ளன.

❖ கணனி அறிவு சம்பந்தமான அளவீடு

கல்வி அமைச்சும் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களமும் இணைந்து பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கணனி அறிவை அளவிடும் பொருட்டு இலங்கையின் அரச பாடசாலைகள், அரசுடன் இணைந்த தனியார் பாடசாலைகளில் இவ்வளவீடு நடத்தப்படுகிறது. இவ்வளவீடு தொடர்பில் கல்வி அமைச்சுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் இத்திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

❖ MDG/SDG சுட்டெண் தயாரித்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இனங்காணப்பட்ட மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளில் உரிய இலக்கை அடைந்துள்ளதா எனப் பரீட்சிக்கும் சுட்டெண்களில் தற்போது இற்றைப்படுத்தக்கூடிய சகல சுட்டெண்களும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய தரவு ஆணைக்குழுவுக்குரிய பணிகள், சர்வதேசத் தரவுகள், தகவல்களின் தேவைகளை நிறைவேற்றல், எதிர்காலத் தரவு வெளியிடும் தினக்குறிப்பை இற்றைப்படுத்தல், சார்க் புள்ளிவிபரங்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் பாகிஸ்தான் புள்ளிவிபரப் பணியகத்திற்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அமுல்படுத்துதல் என்பன தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டது.

❖ தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பம்

கொஸ்ரற்(முழுளுவுயுவு) வேலைத்திட்டத்தினால் வழங்கப்பட்ட உதவியின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய இரு கணனி ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டன. அத்துடன் அவ்வுதவியின் கீழ், CAPI (கணினி உதவியுடனான நேர்காணல் முறை) சம்பந்தமான பயிற்சி, திணைக்கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மக்களியல், சுகாதார அளவீட்டில் டப்லற் கணனி ஊடாக தரவு சேகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல், அரச, அரச சார்புத்துறைப் பணியாளர்கள் சம்பந்தமான தொகைமதிப்பு – 2016 இற்கான கணனி நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

❖ தொகைமதிப்புக் கண்ட வரைபடங்கள் தயாரித்தல்

இலங்கை குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பை 10 வருடங்களுக்கொரு முறை நடத்தி வருகிறது. அதற்கமைய அடுத்த தொகைமதிப்பு 2021 இல் மேற்கொள்ளப்படும். மாவட்ட செய்மதிப் புகைப்படங்கள் பெறுதல், 2012 குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பை ஸ்கானிங் செய்தல், புவியியல் சார் தரவுத் தளம் அமைத்தல், தொகைமதிப்புக் கண்ட வரைபடங்கள் தயாரித்தல் என்பவற்றின் முதல் கட்டமாக கிராம உத்தியோகத்தர் பிரிவு வரைபடங்களின் டிஜிட்டல் படுத்தலானது, மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ அலுவலர்களிற்கு பயிற்சியளித்தல்

திணைக்கள அலுவலர்களின் எண்ணிக்கை, புள்ளிவிபர அறிவு, கணனித் தொழில்நுட்பம் மற்றும் திணைக்கள நடவடிக்கைகளினை மேம்படுத்தும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில், 1146 திணைக்கள அலுவலர்களிற்கு உள்ளகப் பயிற்சிகளும் 65 அலுவலர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சியும் வழங்கப்பட்டது. அத்துடன் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் 16 மாணவர்களுக்கு பயிற்சி நெறியும் 80 பல்கலைக்கழக் வளவாளர்களுக்கு தீணைக்களம் பற்றிய தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டமும் வழங்கப்பட்டது.

4.4 கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

4.4.1 அறிமுகம்

துரித அபிவிருத்தி முயற்சியில், முதலீட்டு உபாயத்திற்று அமைவாக பாரியளவிலான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உரிய நேரத்திலும் உரிய கிரயத்திலும் அமுல்படுத்தப்படுவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. மேலும் கருத்திட்ட அமுலாக்கத்தின் போது ஏற்படுகின்ற தடைகளை அகற்றுவதற்கு உரிய நேரத்தில் இடையீடுகளை மேற்கொள்ளல் அவசியம். தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அறிக்கையிடல் அவசியமாகும். பொது நிதியியல் முகாமைத்துவத்தில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு முக்கியத்துவம் பெறுவதுடன் முதலீடுகள் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்கின்றது. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது சுமுகமான துரித அபிவிருத்திக்கான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளைச் செய்கின்றது.

தொலைநோக்கு

நற்பயன் அளிக்கக்கூடிய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு பிரதான பங்காளியாக இருத்தல்

செயற்பணி

அபிவிருத்தி நோக்குகளின் அடைவுகளையும் விளைவுகளையும் உறுதிப்படுத்துவதற்கு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளையும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான தேசிய மையமொன்றாக செயற்படுதல

பிரதான செயற்பாடுகள்

- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல்.
- தேவையின் அடிப்படையில் கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடல் செயன்முறைக்குத் தேவையான பின்னூட்டல்களை வழங்கல்.
- கொள்கை வழிகாட்டல்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல்
- நிரல் அமைச்சினை ப.வ.செ.தி மற்றும் கி.உ.அ.தி ஆகியவற்றை சுமுகமாக அமுல்படுத்துவதனை வசதிப்படுத்தல்
- அரச உடைமைக் கம்பனிகளின் பெறுபேற்று விளைவுகளை வசதிப்படுத்தல்
  கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.
- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகளை பிரசுரித்தல்

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை சுமுகமாகவும் துரிதகதியிலும் அமுல்படுத்தி, அபிவிருத்தி பயனுறுதியின் இலக்குகளை அடையச் செய்வதில் இத்திணைக்களமானது, பல்வேறுபட்ட கண்காணிப்பு முறைகளைக் கையாள்வதன் மூலம் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

4.4.2 செயற்பாடு: ஜனவரி முதல் டிசம்பர் 2016 வரை

- **கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல்.**

கண்காணித்தல் இத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாகக் காணப்படுவதுடன் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான மற்றும் ஒழுங்கான முயற்சியை திட்டமிட்ட முறையில் வேண்டி நிற்கின்றது. 2016ம் ஆண்டில் 1,356 வெளிநாட்டு மற்றும் அரச நிதியுதவியுடனான சிறிய, நடுத்தர மற்றும் பாரிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்திட்டங்கள், சம்பந்தப்பட்ட தரப்பினருடனான மீளாய்வு கூட்டங்கள், நிரல் அமைச்சுகளினால் சமர்ப்பிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் கள விஜயங்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த இணையத்தள கண்காணிப்பு முறைமையானது பிரதான தகவல் திரட்டும் முறைமையான உள்ள போதும் தற்போது மேம்படுத்தும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இருந்தபோதிலும் அறிக்கையிடல், ஒருங்கிணைப்பு மற்றும் பிரச்சனைகளை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதன் மூலம் அவற்றினை தீர்ப்பதற்கான நடவடிக்கையில் பிரதான பங்கு வகிக்கின்றது.

தொடர்ச்சியான வசதிப்படுத்தல், மற்றும் கருத்துக்களை வழங்கல் என்பவற்றினூடாக தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதிப்படுத்துவதுடன் 80 முன்னேற்ற மீளாய்வு குழுக்கூட்டங்கள் 43 கருத்திட்ட

வழிப்படுதும் குழுக்கூட்டங்கள், கருத்திட்ட தயார்ப்படுத்தல், கொள்வனவு ஆவணப்படுத்தல் முறைமையினை துரிதப்படுத்தல் என்பவற்றை துரிதப்படுத்தல், நிறுவனங்களுக்கிடையிலான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவியுள்ளது.

மேலும் நிதி வழங்குனர்களான ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி மற்றும் ஐப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியோருடனும் திறைசேரி அலுவலர்களுடனான மீளாய்வில் 85 கருத்திட்டங்களின் நிதி மீளளிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் 36 கருத்திட்டங்களின் அமுலாக்கம் கடந்த ஒன்பது மாதங்களாக சரியான பாதையில் உள்ளன. நிலுவையிலுள்ள தீர்க்கப்படாத பிரச்சனைகள் தீர்மானங்களை எடுப்போரின் கவனத்திற்கு கொண்டுவருவதன் மூலம் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கின்றது.

நிதிமூலம் (ரூபா.மில்)	கருத்திட்டங்களின் எண்ணிக்கை				
	மொ.ம.தொ (ரூபா.மில்)				
	<50	50-500	500-3000	3000-5000	> 5000
வெளிநாடு	502	511	152	26	34
உள்நாடு	7	28	24	18	54
மொத்தம்	509	539	176	44	88

தீர்க்கப்படாத பிரச்சனைகள் காரணமாக பின்னடைவாகவுள்ள கருத்திட்டங்கள் அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைவாக அமைக்கப்பட்ட பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவை குழுவின் செயற்பாட்டு மையத்திற்கு அவற்றைத் தீர்ப்பதற்காக கொண்டு வரப்படும்.
இதன் மூலம் 9 கருத்திட்டங்களிலுள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு கருத்திட்டங்கள் முன்னோக்கி நகர்வதற்கு வழிவகுக்கப்பட்டது.

- **தேவையின் அடிப்படையில் கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடல் செயன்முறைக்குத் தேவையான பின்னூட்டல்களை வழங்கல்.**

கருத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்வதில் வரையறைகள் காணப்படுகின்றமையால் 2016ம் ஆண்டு ஒரு கருத்திட்ட மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நாரியகொடல்ல, சிலாபத்தில் அமைந்துள்ள சிலாபம் வீடமைப்புத் திட்டம் மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டது. நிபந்தனைக் குறிப்புக்கள் (Terms of Reference) மற்றும் வினாபத்திரம் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பல கலந்துரையாடல்கள் மற்றும் சாத்திய எல்லை அமர்வுகள் (Scoping Sessions) வீடமைப்பு மற்றும் நிர்மான அமைச்சு, நகர்புற தீர்வு மற்றும் அபிவிருத்தி அதிகார சபை, சிலாபம் நகரசபை, சிலாபம் பிரதேசசபை மற்றும் சிலாபம் பிரதேச செயலக அலுவலர்களுடன் நடாத்தப்பட்டது.

மேலும், வரைபு தேசிய மதிப்பீட்டு கொள்கை தயாரிப்பதற்கான பணி இத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தொடர்ச்சியான பங்குதாரர்களுடனான பயிற்சி பட்டறைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், நிதி வழங்குனர்கள் மற்றும் தொழில்சார் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் வரைபு தேசிய மதிப்பீட்டு கொள்கை பற்றிய பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடாத்தப்பட்டன. டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட இறுதி 2 பயிற்சி பட்டறைகளில் கலந்து கொண்ட பெருமளவான பங்குதாரர்களின் பின்னூட்டல்களை உள்ளடக்கி விரிவான வரைபு 2016 ம் ஆண்டு இறுதியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- **கொள்கை வழிகாட்டல்களின் அமுலாக்கல் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடல**

அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக இச்செயற்பாடானது 2015 ம் ஆண்டிலிருந்து இத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இக்குழுவினால எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நேரடியாக சமூகத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டவை ஆகையால் இவற்றை உரிய நேரத்தில் அமுல்படுத்துவதன் அவசியம் காணப்படுகின்றது. இந்த நிலைப்பாட்டில், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பானது 32 வாராந்த அறிக்கைகள் மற்றும் இரண்டு மாதாந்த அறிக்கைகள் ஊடாக பிரச்சனைகளை இக்குழுவிற்கு அறிக்கையிட்டதன் மூலம் அமுலாக்கத்தை துரிதப்படுத்தியதுடன் பிரச்சனைகளை தீர்க்கக் கூடியதாக இருந்தது.

அரசின் மூலோபாய முயற்சிகளுக்கு ஏற்ப நாட்டில் முதலீடுகளை அதிகரிக்க, தனியார்துறை முதலீட்டு முன்மொழிவுகளின் அனுமதி செயன்முறையை துரித கதியில் நடைபெறச் செய்வதற்கு வசதிப்படுத்தியது. பல்வேறு காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 93 முதலீட்டு முன்மொழிவுகள் உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அவற்றில் 29 இத்திணைக்களத்தின் இடையீட்டினால் - கள விஜயங்கள், விசேட கற்கைகள் மற்றும் சுதந்திரமான அறிக்கைகள் என்பனவற்றின் ஊடாக தீர்வு காணப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது முன்னேற்றகரமான நிலமையாகும்.

- **அரச உடைமை கம்பனிகளின் பெறுபேற்று விளைவுகளை வசதிப்படுத்தல்**

அரசின் ஒரு கொள்கையாக அரச உடைமை கம்பனிகளின் பெறுபேறுகளின் அடைவுகளை அறிக்கையிடும் பணியானது கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நிறுவன ரீதியான பெறுபேற்று சட்டகம் (Organizational Result Frame -ORF) பெறுபேற்று குறிகாட்டிகள் , இலக்குகள், மற்றும் காலவரையறை என்பவற்றை உள்ளடக்கியதாக அரச உடைமை கம்பனிகளுக்கு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. .



முதலாவது சந்தர்ப்பத்தில் 303 அரச உடைமை கம்பனிகளில் 14 கம்பனிகள் மாத்திரம் ஏற்கக் கூடிய நிலையில் தமது நிறுவன ரீதியான பெறுபேற்று சட்டகத்தினை சமர்ப்பித்திருந்தன. இத்திணைக்களத்தால் பயிற்சி பட்டறை, இணையத்தள உதவி மற்றும் ஆலோசனை கிளினிக் மூலமாக இவ் இலக்கத்தை 75 வரை உயர்த்த முடிந்துள்ளது. மேலும் 147 அரச உடைமை கம்பனிகள் நிறுவன ரீதியான பெறுபேற்று சட்டகத்தினை பூரணப்படுத்துவதற்கு தொடர்ந்தும் வசதிப்படுத்தப்படுகின்றன. கொள்கை வகுப்போர் மற்றும் நிரல் அமைச்சுக்கள் காலாண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

- கடன் தவணைகளை உத்தரவாதப்படுத்துவதற்காக சுகாதாரத்துறையின் மீள்நிதியளித்தலுடன் தொடர்புடைய குறிகாட்டிகளின் அடைவினை உறுதிப்படத்துதல்

வழங்கப்பட்ட சேவைகள்	மொத்தம்
பயிற்சி பட்டறை	255
ஆலோசனை கிளினிக்	107
இணையத்தள உதவி	14

இத்திணைக்களமானது இரண்டாவது சுகாதாரத் துறையின் அபிவிருத்தி நிகழ்சிசித்திட்டங்களின் பெறுபேறுகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக உவக வங்கிக்கு அறிக்கையிடுவதற்கு பொறுப்பாகவுள்ளது. இது ஆண்டுக்குரிய செயற்பாடாகவுள்ளது. திணைக்களமானது பெறுபேறுகள் சம்பந்தமான விரிவான ஆய்வு அறிக்கையை (சுகாதார அமைச்சினால் அறிக்கையிடப்படும் நாடு முழுவதுமான முன்னேற்றத்தை பயன்படுத்தி) முன்னைய ஆண்டு அடைவுகளுடனும் உடன்பட்ட இலக்குகளுடனும் ஒப்பீடு செய்து தயாரிக்கின்றது. நிதி வழங்குனர்கள் பெறுபேறுகளின் அடைவுகளை சரிபார்க்கும் செயன்முறையினூடாக அறிக்கையிடப்பட்ட அடைவுகளின் அடிப்படையில் நிதியினை மீளளிப்புச் செய்யும். அதன் பிரகாரம், 2015 ம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை சரியான நேரத்தில் உலக வங்கிக்கு வழங்கி உலக வங்கியினால் சுமுகமான நிதி மீளளிப்புக்களை வசதிப்படுத்துவதன் மூலம் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு உதவியுள்ளது.

- **பன்முகப்படுத்தப்பட்ட மூலதன நிகழ்ச்சித்திட்டம் (DCB) மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை சுமுகமாக நடைமுறைகப்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுத்தல்**

பொருளாதார, கலாசார, சமூக மற்றும் சமய அபிவிருத்தி நடவடிக்கைகளை கிராமிய மட்டங்களில் மேம்படுத்துவதற்காக அரசாங்கம் 2016ம் ஆண்டில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துள்ளது;

பன்முகப்படுத்தப்பட்ட மூலதன நிகழ்ச்சித்திட்டம் (DCB) மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RIDP). ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்பு கூடத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டு இந்நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்குமாறு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் இதனால் இந்சிகழ்ச்சித்திட்டத்தினை செயற்றிறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கான தகவலறிந்த பின்னரான தீர்மானங்களை அமைச்சினால் எடுக்க கூடியதாகின்றது.

இச்செயற்பாடானது ஜுன் 2016 ஆரம்பிக்கப்பட்டதுடன் வாராந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் பிரச்சனைகளுக்குறிய பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதன் மூலம் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் சுமூகமான நடைமுறைப்படுத்தலை முகாமை செய்ய முடிகின்ற அதேவேளை மாவட்டங்களின் வினைத்திறனான காசுப்பாய்ச்சலிற்கு அமைச்சினால் உத்தரவாதமும் வழங்க கூடியதாகின்றது.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் 28,649 அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் 28,448 திட்டங்கள் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளன. இவை சிறிய நீர்ப்பாசனம், சமூகத்தை அடிப்படையாகக்கொண்ட நீர்வழங்கல், சிறிய அளவிலான மின்மயமாக்கல் திட்டங்கள், கிராமிய அணுகல் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு ஆகிய துறைகளை சார்ந்ததாக இருப்பதுடன் இதன் மொத்த கிரயம் ரூபா 11,545.17 மில்லியன்களாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் 23,547 அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் 23,444 திட்டங்கள் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளன. இவை சிறிய நீர்ப்பாசனம், கிராமிய நீர்வழங்கல், கிராமிய மின்மயமாக்கல் திட்டங்கள், கிராமிய அணுகல், சமூக அபிவிருத்தி, சமூக நலன்புரி, சமூக சேவைகள், சமூக பாதுகாப்பு , கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு ஆகிய துறைகளை சார்ந்ததாக இருப்பதுடன் இதன் மொத்த கிரயம் ரூபா 3,090.86 மில்லியன்களாகும்.

- **அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்றிறன் அறிக்கைகளை வெளியிடல்**

கொள்கை வகுப்பாளர்கள், நன்கொடை முகவர்கள் மத்தியில் கருத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் பரவலாக்கப்படுவதுடன் இறுதியாக திணைக்களத்தின் இணையத்தளமான

www.pmm.gov.lk இல் வெளியிடப்படுவதனூடாக பொது மக்கள், சிவில் சமூகம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு பொது செலவினங்கள் மற்றும் வளங்களின் வினைதிறன் மற்றும் விளைதிறன் வாய்ந்த பயன்பாடு குறித்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

4.5 இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவனம்

4.5.1 தூநோக்கு , செயற்பணி

தூநோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார பரிமாற்றத்திற்கான இணைப்பாளராக இருக்கும் பூகோள ரீதியாக அங்கிகாரம் பெற்ற நிறுவனமாக உருவெடுத்தல்.

செயற்பணி

சகல இலங்கையரகளினதும் வாழ்க்கையில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கான கொள்கை நிகழ்ச்சி நிரல்களை வடிவமைப்பதற்கும் சமூக – பொருளாதார பிரச்சினைகள் பற்றிய நம்பகத்தகுந்த தகவல்களை எம்மீது அக்கறை செலுத்துகின்ற தீர்மானம் எடுப்போர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு உயர் தரமானதும், சுதந்திரமானதும் மற்றும் கொள்கை தொடர்புடையதுமனா ஆய்வுகளை நடாத்துதல்.

4.5.2 2016 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதிச் செயலாற்றுகை

	ஆண்டுக்கான டீரனபநவ	ஆண்டுக்கான	விலகல்	%
	பாதீடு	உண்மை	(பாதிடு – உண்மை)	
	ரூ.	ரூ.	ரூ.	
வருமானம்				
இலங்கைக அரசாங்கத்திலிருந்தான பங்களிப்புக்கள்	18,000,000	15,000,000	(3,000,000)	-17%
செயற்திட்ட வருமானம்	40,000,000	25,027,771	(14,972,229)	-37%
ஐனுசுஊ வுவுஜ இருந்தான வருமானம்	23,000,000	24,085,393	1,085,393	5%
வட்டி வருமானம்	16,100,000	27,051,179	10,951,179	68%
நன்கொடை நிதியிலிருந்தான பங்களிப்புக்கள்	23,000,000	23,000,000	-	-
காணிக்கான பண ரீதியற்ற அரச பங்களிப்புக்கள்	-	10,920,000	-	-
கருத்தரங்கு ∴ வேலையமைர்வுகளிருந்தான வருமானம்	2,200,000	908,104	(1,291,896)	-59%
நானாவித வருமானம் (வெளியீடுகள் ∴ ஏனைய வருமானம்)	1,000,000	1,936,994	936,994	94%
னமூலதன நன்கொடை மீளளிப்பு வருமானம்	6,242,013	9,364,140	3,122,127	50%
னஆய்வு கூடத்தை வாடகைக்கு விடுவதனால் கிடைக்கும் வருமானம்	700,000	859,346	159,346	23%
மொத்த வருமானம்	130,242,013	138,152,927	(7,910,914)	
செலவீனங்கள்				
ஊழியர் நலன் தொடர்பான கிரயங்கள்	62,000,000	59,107,356	(2,892,644)	-5%
ஆதனம், பொறி மற்றும் உபகரங்கள் மீதான பெறுமானத் தேய்வு	28,000,000	18,241,514	(9,758,486)	-35%
ஆய்வுக் கிரயம்	9,000,000	13,605,136	4,605,136	51%
கருத்தங்கு மற்றும் செயலமர்வுக் கிரயம்	1,320,000	665,840	(654,160)	-50%
பயன்பாட்டு செலவீனங்கள்	17,310,000	18,109,225	799,225	5%
பிரயாணச் செலவீனங்கள்	1,600,000	463,122	(1,136,878)	-71%
ஏனைய செயற்பாட்டுச் செலவீனங்கள்	10,100,000	13,612,477	3,512,477	35%
கேட்ப்போர் கூடத்தை வாடகைக்கு விடல்	280,000	325,239	45,239	16%
நாணயமாற்றுவீத நட்டம்	-	220,237	220,237	-5%
மொத்தச் செலவீனம்	129,610,000	124,350,146	5,259,854	
மிகை	632,013	13,802,781	(13,170,768)	

அட்டவணை இல. 4.6: 2016 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதிச் செயலாற்றுகை

4.5.3 2016 சனவரி 01 – திசம்பர் 31 வரையில் கொ.க.நிறுவத்தின் பிரதான செயற்பாடுகள்

ஆய்வுச் செயற்பாடுகள்

கொள்கை மறுசீரமைப்புக்கள் மற்றும் போட்டித்தன்மைகள்

- இலங்கை: அரச பொருளாதாரம் 2016
- இலங்கையின் ரான்ஸ் - பசுபிக் பங்காண்மை அமுல்படுத்தல்கள் (TPP)
- சீன - இலங்கை சு.வ.உ. இன் கீழ் சீன சந்தைக்குள் நுழைவது ஏற்றுமதியாளர்களின் எதிர்பார்ப்புக்கள் (FTA)
- டிசிஏ சாத்தியப்பாட்டு ஆய்வு

குடிபெயர்வு மற்றும் அபிவிருத்தி

- இலங்கையில் நகரமயமாதல் பற்றிய மாற்று வரைவிலக்கணம்
- குடிபெயர்வுக் கிரயத்தின் பெறுமதிச் சங்கிலி பகுப்பாய்வு
- ஊழியச் சந்தை பங்குபற்றல் பகுப்பாய்வில் ஒருங்கிணைந்த குடிபெயர்வுத் தொழிலாளர்கள்
- குடிபெயர்வு மற்றும் பால்நிலை பெறுபேறுகள் : இங்கையில் தெரிவுசெய்யப்பட்ட கொள்கைகளின் பகுப்பாய்வு

நிலைபெறுதகு அபிவிருத்திக்கான மனிதவளங்கள்

- இலங்கையில் ஊழியர் சந்தையின் சிக்கல்கள் கண்டறிதல்கள்
- பெருந்தோட்டத் துறையில் நடைமுறையில் உள்ள வேதன மதிப்பீடு
- புள்ளிவிபரவியல் தரவுகளைப் பயன்படுத்தி ஊழியர் சந்தைப் பகுப்பாய்வு
- வயோதிப வயது வருமானப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

தனியார் துறை அபிவிருத்தி

- பூகோள போட்டித்தன்மை அறிக்கை 2016/2017
- இலங்கைக்கு யப்பான் முதலீட்டாளர்களை கவர்வதில் மு.ஊ.வ இன் பணி (BOI)
- எப்.டி.ஐ உட்பாய்ச்சல் தொடர்பில் கொள்கை சூழல் மற்றும் அதன் தாக்கங்களும் : இலங்கையிலிருந்தான சான்றுகள்

வறுமை மற்றும் இடர்களுக்கு ஆளாகும் நிலைமை

- எஸ்.டி.ஜி.எஸ் களின் அமுல்படுத்தல்களின் தேசிய பிரயோக மட்டம் : இலங்கை பற்றிய விடயம். (SDGs)
- உணவினை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டம் - இலங்கை பற்றிய விடய ஆய்வு
- இலங்கை நாட்டு பங்காண்மை உபாயம் 2017-2021: வறுமை மதிப்பீடு
- இலங்கை பாதுகாப்பு வலைகள் மீளாய்வு தொடர்பான இற்றைப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் விவசாயம்

- இலங்கைக்கான தேசிய வானிலை மாற்றம் தழுவல் செயற்பாட்டுத் திட்டத் தயாரிப்பு
- வினைத்திறனான தழுவல் தீர்மானங்களுக்கான வானிலை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் இடைவெளிகளுக்கு தீர்வு காணல்
- இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்திகளின் விலை மற்றும் விநியோகப் போக்கு பற்றிய ஆய்வொன்று.
- இலங்கையில் வாசனைத் திரவிய ஏற்றுமதித் துறையின் பெறுமதிச் சங்கில பகுப்பாய்வு.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு மீளாய்வு : பூச்சிய நிலை பட்டிணி

4.5.4 2016 சனவரி 01 – திசம்பர் 31 வரையில் கொ.க.நிறுவத்தின் பிரதான செயற்பாடுகள்

I. மாநாடுகள் / கருத்தங்குகள் / செயலமர்வுகள்

- இலங்கை அரசாங்கத்தின் பங்காண்மையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட "இந்து சமுத்திர துணைக்கண்ட திமிங்கில மற்றும் டொல்பின் பார்வையிடல் செயலமர்வு" – வெளிவிவகார அமைச்சு, ஐஓஆர்ஏ செயலகம், சர்வதேச திமிங்கில ஆணைக்குழு (IWC), மேர்டோச் பல்கலைக்கழகத்தின் செடீன் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் கொ.க.நி, கொழும்பு, 24, பெப்புருவரி.

- " தொடர்ச்சியாக நான்கு வருடங்களாக, உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தினை நினைவூட்டும் முகமாக, "உலக நுகர்வோர் தின சம்மேளனம் 2016" கொ.க..நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது, கொ.க.நி. கேட்ப்போர் கூடம், மார்ச் 15
- பல்நோக்கு வர்த்தக உடன்படிக்கைகளில் "புதிய பிரச்சினைகள்" பற்றிய அடைவுகளை நோக்கி வர்த்தக போட்டித்தன்மை மேம்பாடு" பற்றிய கொள்கை உருவாக்குனர்களின் உயர்தர செயலமர்வு, இலங்கை அரசாங்கம், வாணிப திணைக்களம், கொ.க.நி மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் என்பவற்றின் பங்காண்மையுடன் பொதுநலவாய நாடுகளின் செயலகம், (IISD) வர்த்தக போட்டித்தன்மை பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது, கொழும்பு, 16, - 18 திகதிகள், மார்ச் மாதம்.

- ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சு (MPI) மற்றும் சர்வதேச உணவுக் கொள்கை நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் கொ.க.நிறுவனம் இணைந்து இலங்கையில் உணவு தொடர்பான பெறுமதிச் சங்கில அபிவிருத்தி (IFPRI) பற்றிய தேசிய செயலமர்வொன்றை நடாத்தியது, ஏப்ரல் மாதம் 6 - 7 ஆம் திகதிகள்.
- வினைத்திறனான தழுவல் தீர்மானங்களுக்கான வானிலைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் இடைவெளியினை இணைத்தல்" தொடர்பான பிராந்திய ஆலோசனை செயலமர்வு: ஒருங்கிணைக்கப்பட்ட வானிலை தகவல் முகாமைத்துவ முறைமை" காலநிலை அவதான நிலையத் திணைக்களம் (DOM), ஜனதாசஹன மற்றும் அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பொருளாதாரத்திற்கான தென் ஆசிய வலையமைப்பு (SANDEE) என்பவற்றுடன் இணைந்து கொ.க.நிஏற்பாடு செய்தது. யூன் மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகள், கொழும்பு.

- சர்வதேச வர்த்தக கொள்கையின் அண்மைய போக்கு : ஐக்கிய அமேரிக்காவின் நோக்கில்", கொ.க.நி. மாநாட்டு அறை – யூலை 4
- வறல்வலய விவசாயிகளின் கோரிக்கையான காலநிலை காப்புறுதிக்கான கேள்வி தொடர்பில் கொ.க.நி ஆய்வின் கண்டறிதல்களை வெளிப்படுத்தும், தீர்மானம் எடுப்போரின் கூட்டம், பூகோள அபிவிருத்தி வலையமைப்பு நிறுவனத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட்டது, கொ.க.நி. மாநாட்டு அறை, செத்தெம்பர் 13 ஆம் திகதி.

- "வர்த்தகக் கொள்கை பகுப்பாய்வு தொடர்பான தேசிய செயலமர்வு" கொ.க.நிறுவத்துடன் இணைந்து ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. கொ.க.நிறுவன கேட்ப்போர் கூடம், ஒக்டோபர் 24 மற்றும் 25 ஆம் திகதி.
- இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் தேர்வுகள்" : இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக அரிசி, மீன் மற்றும் பால் உற்பத்திகள் பற்றிய பல் சந்தைப் பகுப்பாய்வு" பற்றிய கற்கை பகிர்வு மற்றும் கொள்கை உசாவுகை செயலமர்வு, தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) மற்றும் இலங்கை விவசாயப் பொருளாதார ஒன்றியம் (SLAEA) என்பவற்றுடன் கொ.க.நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்தது. க்லப் பாம் பே ஹோட்டல், மாரவில, 3 மற்றும் 4 ஆம் திகதி நவம்பர்.

- "சீன – தென் ஆசிய உறவுகள்" பற்றிய கருத்தரங்கு, பேர்க்கின் பல்கலைக் கழகத்தின் கல்வியலாளர் பிரதிநிதிகள் மற்றும் ஆசிய விடயங்களுக்கான திணைக்களத்தின் அலுவலர்கள், சீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டது. கொ.க.நி. கேட்ப்போர் கூடம், நவம்பர் மாதம், 07 ஆம் திகதி.
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான இருபக்க சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகளின் நன்மைகள் மற்றும் தீமைகள்" தொடர்பான கருத்தரங்கு, கலாநிதி மனுவல் மொன்டெஸ், நிதி மற்றும் அபிவிருத்தி தொடர்பான சிரேட்ட ஆலோசகர், தென்னக நிலையம், ஜெனேவா, கொ.க.நி. கேட்ப்போர் கூடம், நவம்பர் மாதம், 10 ஆம் திகதி.

- "நிலைபெறுதகு மற்றும் முழுமையான அபிவிருத்திக்கான விவசாயம்" தொடர்பான இலங்கை விவசாயப் பொருளாதார அமையத்தின் 10 ஆவது வருடாந்த ஆராய்ச்சி சம்மேளனம், கொள்கைகள் கற்கை நிறுவனத்தின் பங்காண்மையுடன் இலங்கை விவசாயப் பொருளாதார அமையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. கொ.க.நி. கேட்ப்போர் கூடம், திசம்பர் மாதம், 08ஆம் திகதி.
- "நாட்டின் பொருளாதார நிலைமைகள், இந்தியா, சீனா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வர்த்தக உடன்படிக்கைகள் ∴ சமரசங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் தற்பொழுதைய வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஹம்மாந்தோட்டை விசேட பொருளாதார வலயம் (SEZ) எவ்வாறு சமநிலைப்படுத்தும் என்பது பற்றி கலந்துரையாடுவதற்கு சீன அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதிநிதியொருவரின் தரிசிப்பு (CDI) , கொள்கைள் கற்கை நிறுவன கேட்ப்போர் கூடம், திசம்பர் 19 ஆம் திகதி.

II. வெளியீடுகள் 2016

- "இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் வர்த்தக வசதியளிப்புக்கள்" சுவேந்திராணி ஜயரத்ன மற்றும் ஜனக விஜேயசிறி, செயற்பாட்டு பத்திர தொடர் இல. 22, மார்ச் 2016

- " இலங்கையில் வானிலை மாற்றப் பிரச்சினைகள்" தொகுதி 02, கொள்கைகள் கற்கை நிறுவன வெளியீடு, கொ.க.நி. வானிலை வலை பக்கத்தின் ஆவணங்களின் சேகரிப்புக்கள், சனவரி 2016.

- "பேசும் பொருளாதார டைஜெஸ்ட்" இன் 11 ஆவது பதிப்பு, யூலை – திசம்பர் 2015 தொகுதியின் தலைப்புப் பண்புகள் "கொ.க.நி, 25 வருடங்களின் தொடர்ச்சி....."

- " இலங்கையில் நகரப் பகுதியை மீள வரையறைசெய்தல் " பிலேசா வீரரத்னவினால் கொ.க.நி வெளியீடு, செயற்பாட்டுப் பத்திரத் தொகுதி இல. 23, யூன் 2016

- "புதிய தாராள பொருளாதார சூழலில் சுதந்திர சுகாதார பராமரிப்புக்கான சவால்கள்" - இலங்கை அனுபவங்கள்", கொ.க.நி. கலந்துரையாடல் பத்திர இல. 01, ஜீ.டி. தயாரத்னவினால், யூன் 2016.

- "பேசும் பொருளாதார டைஜெஸ்ட்" இன் 12 ஆவது பதிப்பு, சனவரி – யூன் 2016 தொகுதியின் தலைப்புப் பண்புகள் "பூகோள இலக்குகள் : இலங்கை தயாராக உள்ளதா?"

- அரச பொருளாதாரம் 2016 – வளர்ச்சிக்கான அரசிறைக் கொள்கைகள்: அபிவிருத்திக்கான நிலைபெறுதகு நிதியளிப்பு.

- " புதிய தாவர வகைகள் மற்றும் விவசாயிகளைக் பாதுகாப்பதில் புலமைச் சொத்து உரிமைகள்" மரபார்ந்த அறிவு : இலங்கையில் நெல் பற்றிய விடயம்," திலானி ஹிரிமுதுகொடகே மற்றும் பராக்கிரம ஏ. சமரதுங்க அவர்களினால், செயற்பாட்டு பத்திர இல 24, செத்தெம்பர்.

- இலங்கையில் வரி விதிப்பு : நடைமுறைப் போக்கு மற்றும் எதிர்பார்க்கைகள் ", டி.டி.எம். வைத்தியசேகர, செயற்பாட்டுப் பத்திர இல. 25, ஒக்டோபர் 25 ஆம் திகதி

- " வர்த்தக மற்றும் பிரயாண கணக்காய்வு : இலங்கை", ஜனக விஜயசிறி, சுவேந்திராணி

- அரச அல்லது தனியார் : இலங்கையில் சுகாதார வசதியளிப்போரின் தெரிவுகள் தொடர்பான தீர்மானக் காரணிகள்", சுனிமலி மதுராவலவினால், சுகாதார பொருளாதார தொடர் இல. 3, நவம்பர்.

4.6 தேசிய மனித வள அபிவிருத்தி சபை

4.6.1 தொலைநோக்கு, செயற்பணி, பிரதான பணிகள்

தொலைநோக்கு

எதிர்காலத்திற்கு தயாராக எங்கள் பணியாட்கள்

செயற்பணி

எங்கள் நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கு, அதனை அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் வினைத்திறன் மிக்க கொள்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றம் புதுமையான உபாயமார்க்கங்களை உருவாக்கல்.

பிரதான பணிகள்

I. மனிதவள அபிவிருத்திக்கான தொழில்சீரமைப்பு மற்றும் ஒத்துழைப்பு உட்பட மனிதவள அபிவிருத்தி கொள்கை தொடர்பாகவும், அதன் அனைத்து நோக்கங்கள் தொடர்பாகவும் பின்வருவன பற்றி அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
இ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
ஈ) பயனடையாக குழு நபர்களுக்கான சமூகப் பாதுகாப்பினை வரைதல் மற்றும்
உ) பொருளாதார மறுசீரமைப்புடன் உரிமை வழங்கலைப் பராமரித்தல்.

II. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்

III. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்

IV. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் அமுலாக்கத்தை கண்காணித்தல்

V. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும்

VI. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் எனக் கருதும் நன்மைகள் அல்லது பின்னர் பலன்தரக்கூடியவை என அனைத்தையும் செயற்படுத்தல்..

4.6.2 செயலாற்றுகை – 2016

கருத்திட்டத்தின் பெயர்	முன்னேற்றத்தின் சுருக்கம்	முன்னேற்றத்தின் வீதம் %
இலங்கை தொழில் சந்தை போக்கு தொடர்பான அறிக்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் வெளியிடுதல்	புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக மேலும் இரு மாதத்திற்கு ஆலோசனையாளரின் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது.	90%
தொழில்நுட்ப துறையில் காணப்படும் திறன் இடைவெளிக்கான கற்றலைப் பூர்த்திசெய்தல்.	உரிய நிறுவனங்களுக்கு கேள்விக் கொத்து அனுப்பப்பட்டது. கேள்விக்கொத்தை சேகரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது.	50%
பொதுத்துறையில் முகாமைத்துவ தகைமையை கட்டியெழுப்புவதற்கு மனிதவள உபாயமார்க்கத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதனை வெளியிடுவதற்கு திட்டமிடுதல்.	1. FW தகைமைக்கான அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு அச்சடிக்கப்பட்டள்ளது. 2. அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக கௌரவ பிரதம மந்திரியால் FW தகைமை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	90%
தொழில் அமைச்சின் துணையுடன் தேசிய மனிதவள கொள்கைளை மீளாய்வு செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.	கொள்கைகள் கற்றல் நிறுவனத்தினால் கொள்கைப் பத்திரம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்திற்கு கையளிப்பு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவைக்கு கொள்கைப் பத்திரம் அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது	100%
சுற்றுலாத்துறை, உணவு பரிமாற்றல், ஆடைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளை உள்ளடக்கி பிராந்தியங்களில் உள்ள தொழில்வாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவாற்கான பயிற்சி செயலமர்வுகள்	1822 மாணவர்களை இலக்காக் கொண்டு 6 மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.	100%
பிராந்தியங்களில் ரக்கியா அருண நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.	தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் நான்கு நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. (களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு)	100%
இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியினரை ஊக்குவிப்பதற்கும் பலப்படுத்தவதற்கும் அடையாளம் காணப்பட்ட பங்குதாரர்களுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையினரின் வியாபார இயலுமை பலப்படுத்தல்.	601 சிறிய மற்றும் தொழில்முயற்சியாளர்களை இலக்காக் கொண்டு 6 சிறிய மற்றும் நடுத்தர நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.	100%
மாத்தறை மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தி தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் காணுதல்.	1. அறிக்கையை பூர்த்தி செய்தல். 2. உரிய நலன் விரும்பிகளுக்கு அறிக்கையை விநியோகித்தல்	100%
2.SLIDAமற்றும் PIM உதவியுடன் பொதுத்துறையில் தலைமைத்தவத்தை பலப்படுத்துவதற்கு தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல் (வெளிநாட்டு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளல்)	பூர்த்திசெய்யப்பட்டள்ளது.	100%
NHRDC ஜேர்னல் ஊடாக வருடத்திற்கு இரு முறை இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் நிகழ்ச்சித்திட்டங்களை வெளிப்படுத்தல் மற்றும் நலன்விரும்பிகளுக்கிடையில் தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தல்.	சஞ்சிகை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உரிய தரப்பினருக்கு விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.	100%

உலக வங்கி மற்றும் தனியார் துறையின் உதவியுடன் மனித மூலதன மாநாட்டை நடாத்தல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	100%
அனைத்து நலன்விரும்பிகளுக்கும் வழங்கும் அதன் சேவைகளை மேம்படுத்துவதற்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைக்கான தரம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தலுக்கான திட்டத்தை உருவாக்கல் மற்றும் அமுல்படுத்தல்.	ISO 9001:2015ற்கான இறுதி ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டுளது. ISO 9001:2015 சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டது.	100%
இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை ஊழியர்களின் அபிவிருத்திக்கான ஆரம்ப நடவடிக்கைகள்.	1.தனிப்பட்ட பயிற்சி – 5 2. குழப் பயிற்சி – 7 3. தொழில் அபிவிருத்திக்கான நிதி உதவி – 2 4. வெளிநாட்டுப் பயிற்சி - 2	87%
தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் KPMG உதவியுடன பொது தொழில்முயற்சிகளின் ஆளுமையை மேம்படுத்தவதல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	100%
பொதுத் தொழில்முயற்களின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கான கைநூலை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.	கைநூலைத் தயாரிப்பதற்கான குழு நியமிக்கப்பட்டள்ளது.	20%
பொருளாதார முன்னேற்றத்திற்கு முச்சக்கரவண்டி சாரதிகளை எவ்வாறு உள்ளீர்ப்பது.	கொள்கையைத் தயாரிப்பதற்கான குழு நியமிக்கப்பட்டள்ளது.	100%
AHRP யின் பங்களிப்புடன் மனித மூலதன முகாமைத்துவ விருதுகள்	கட்டளைக்கற்களை அறிமுகப்படுத்தவதற்காக தனியார் துறைக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.	10%

அட்டவணை இல. 4.7: செயலாற்றுகை – 2016

நிதிச் செயலாற்றுகை விபரங்களுக்காக தயவுசெய்து இணைப்பு VI பார்க்கவும்

ரெக்கியா அருண , பொலநருவ 2016-11-04

மனிதவள மகாநாடு 2016-08-11

4.7 இலங்கை மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி அதன் மையக்குறிக்கோள்களை எய்தும் பொருட்டும் அதே போன்று இலங்கை அரசாங்கத்துக்கான பொருளாதார மதியுரையாளர், வங்கியாளர் மற்றும் முகவர் என்ற அதன் பொறுப்புக்களை ஆற்றும் பொருட்டும், இலங்கை மத்திய வங்கியானது பல்வேறுபட்ட திணைக்களங்களினால் முகாமைப்படுத்தப்படுகின்ற தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

1. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2016இல் நிலைத்துநிற்கும் அடிப்படையில் பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு தேவையான கொள்கை வழிமுறைகளை மதிப்பிடுவதற்காக நாணயச்சபைக்கு கொள்கை ஆலோசனைகளை வழங்கியிருந்தது. அதன்படி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் கொள்கை பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய வங்கியானது பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை பேணும் நோக்கில் இறுக்கமான நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தியிருந்தது. அந்த வகையில் மத்திய வங்கியானது பணம் மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் மிகையான விரிவாக்கத்திலிருந்து பொருளாதாரத்தில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வி அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்கு வணிக வங்கிகளின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கத்தக்கதான நியதி ஒதுக்கு விகிதத்தை அதிகரித்திருந்ததுடன் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை இரண்டு சந்தர்ப்பங்களில் அதிகரித்தது. நாணய இறுக்கத்தன்மையின் விளைவாக சந்தை வட்டி வீதங்கள் அதிகரித்திருந்தன. பணம் மற்றும் கொடுகடன் என்பவற்றின் மெதுவான வளர்ச்சியுடன் முன்னோக்கிய காலப்பகுதியில் கேள்விப்பக்க பணவீக்க அழுத்தங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் வெளிநாட்டுத்துறையை பொறுத்தவரையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சூழல்களால் ஏற்படுத்தப்பட்ட சவால்கள் பொருளாதார உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கும் பொருளாதாரத்தின் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கும் 2016இல் பல்வேறு கொள்கை படிமுறைகளை எடுப்பதற்கு மத்திய வங்கியினை தேவைப்படுத்தியிருந்தது. அந்தவகையில், வாகனங்களின் இறக்குமதி அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் 2015இல் அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதமானது மேலும் இறுக்கமாக்கப்பட்டது. சென்மதி நிலுவைக்கு ஆதரவளிப்பதற்காக, ஆறு கட்டங்களில் மூன்று வருடங்களில் பகிர்ந்தளிக்கப்படவுள்ள நாட்டின் தற்போதைய அனுமதிப்பங்கு 185 சதவீதத்திற்கு சமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான விரிவாக்கிய நிதி வசதியினை பன்னாட்டு நாணய நிதியத்திடம் நாடியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது இந்த பேச்சுவார்த்தைக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியிருந்தது. மத்திய வங்கி 2016 யூன் மாதத்திற்கு இலக்கிடப்பட்ட தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்கு மற்றும் பணவீக்க இலக்கு என்பவற்றை வெற்றிகரமாக அடைந்திருந்த அதேவேளை முதலாவது மீளாய்வின் முடிவினைத் தொடர்ந்து இலங்கை 2016 நவம்பரில் இரண்டாவது கட்டத்தை பெற்றுக்கொண்டது. அதேவேளை மத்திய வங்கியானது போதுமான பன்னாட்டு ஒதுக்கு மட்டத்தை பேணுவதற்காக சந்தையிலிருந்து அந்நியச் செலாவணியை கொள்வனவு செய்திருந்த வேளையில் நாணயமாற்று வீதத்தை தீர்மானிப்பதில் நெகிழ்வுத்தன்மையை அனுமதித்திருந்ததுடன் குறிப்பாக இறுதிக் காலாண்டில் அரசாங்க பிணையங்களின் வெளிப்பாய்ச்சல்களிலிருந்து தோற்றம் பெற்ற கேள்வியை பூர்த்தி செய்வதற்காக மாத்திரம் அந்நியச் செலாவணியின் நிரம்பலை வரையறுத்திருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியை நோக்கியதான அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிப்பதற்காக நாணயச்சபையின் வெவ்வேறுபட்ட கொள்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நாணய நிலைமைகள் மற்றும் மத்திய வங்கி அதனது குறிக்கோள்களை அடைந்துகொள்வதன் இயலுமைத்தன்மையின் மீதான தற்போதைய இறைக்கொள்கையின் தாக்கம்" என்ற அறிக்கையை தயார்செய்திருந்ததுடன் அதனை நாணயச்சபையின் ஒப்புதலுடன் கௌரவ நிதியமைச்சருக்கு சமர்ப்பித்திருந்தது. 2016 காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக கொள்கை ஆலோசனைகளை வழங்கியிருந்ததுடன் அலுவலர்கள் உண்மைத்துறை கொள்கைகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட உள்ளக மற்றும் வெளியக குழுக்களில் பங்குபற்றியிருந்தனர். பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியுடன் மத்திய வங்கியின் தொழில்நுட்ப இயலளவை பலப்படுத்துவதற்கான முயற்சியானது பலப்படுத்தப்பட்டது. மேலும், மத்திய வங்கியின் ஆண்டறிக்கை உள்ளடங்கலாக சட்டபூர்வமான வெளியீடுகளுக்கான கால இலக்கிடல் அடையப்பெற்றிருந்த அதேவேளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது குறிப்பாக நாணய மற்றும் வெளிநாட்டு துறைகள் தொடர்பான தேசிய புள்ளிவிபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் வெளியிடல் போன்றவற்றை மேற்கொண்டிருந்தது.

(தயவுசெய்து வரைடங்களிற்காக இணைப்பு II இனைப் பார்க்கவும்).

2. பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பதுடன், நாணயச் சபை, பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தும் பொறுப்புக்களையும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி சந்தையினைக் கண்காணிக்கும் பெறுப்பினையும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைத்திருக்கிறது. பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமான குறிக்கோள்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறித்துரைக்கப்பட்டிருப்பதுடன் அவை முக்கியமாக நிலையான வருமான பிணையங்கள், பணச் சந்தைக் கருவிகள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இணைத்தரப்பினரின் வலுவானதன்மை மற்றும் கொடுகடன் நம்பத்தன்மை என்பனவற்றினை பரிசீலணையில் கொண்டு, முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களான மத்திய வங்கிகள், உயர்தரம் வாய்ந்த வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குச் சொத்து பட்டியல்களின் சொத்து மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிக்கும் பொழுது திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், இடர்நேர்வு

முகாமைத்துவ வசதிகள், வருமான உருவாக்க இயலாற்றல்கள் மற்றும் நாணயச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட விதிகள் போன்ற பல முக்கிய காரணிகள் பரிசீலனையில் எடுக்கப்பட்டன. உலக வங்கியின் ஒதுக்கு மதியுரை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன், இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டு ஒதுக்குகளை விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையுடன் முகாமைத்துவப்படுத்தி வருவதுடன், இதன் கீழ் சொத்துக்கள் மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய காரணிகளுக்கிணங்க உபாய ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. இச்செயன்முறையானது உபாயச் சொத்து ஒதுக்கீடு என அழைக்கப்படுவதுடன், இது, எதிர்கால கொடுப்பனவுக் கடப்பாடுகள், மூலதனத்தினை பேணிப்பாதுகாத்தல் மற்றும் வருமானத்தினை உயர்த்துதல் என்பனவற்றைப் பூர்த்திசெய்தல் உட்பட அதன் நீண்டகால முதலீட்டுக் குறிக்கோள்களை எய்துவதற்கு எந்தவொரு நேரத்திலும் பொருத்தமான விதத்தில் சொத்துக்களை ஒதுக்குவதற்கு ஏற்ற தீர்மானத்தினை மத்திய வங்கி எடுப்பதனை இயலுமைப்படுத்துகின்றது.

மத்திய வங்கியின் ஒதுக்குகளையும் அரசாங்கத்தின் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள் (ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நிறுவனம் நீங்கலாக) 2015 இறுதியின் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனாகக் காணப்பட்டது. இதன் பணிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் இவ்வாண்டுப்பகுதியில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் மத்திய வங்கியின் ஒதுக்குக் கூறுகளை தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது.

2016இல், உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள், செலாவணி வீதத்தில் ஏற்படும் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் அதன் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் ஊடாக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டது. இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக 2015 திசெம்பர் இறுதியின் ரூ.144.0623 இலிருந்து 2016 திசெம்பர் இறுதியில் ரூ.149.8000 இற்கு 3.83 சதவீதத்தினால் தேய்வடைந்தது. பெடரல் றிசேர்வின் வட்டி வீத உயர்வின் எதிர்பார்ப்பு காரணமாக அரச பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் வெளியில் அனுப்பப்பட்டமை அதேபோன்று இறக்குமதிச் செலவின் காரணமாக தோன்றிய வெளிநாட்டுச் செலாவணிக்கான உயர்ந்த கேள்வி என்பனவற்றின் விளைவாக மூலதனம் வெளிச்சென்றமை வெளிநாட்டுச் செலாவணியின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தி தேய்வடையச் செய்தது. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 13,592.48 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 14,769.50 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன்படி, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நாளாந்த சராசரி அளவு 2016இல் ஐ.அ.டொலர் 61.03 மில்லியனாக விளங்கியது. மேலும், செலாவணி வீதத்தில் ஏற்படும் மிகையான தளம்பல்களை கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 1,132.22 மில்லியனை ஈர்த்துக்கொண்டு 1,900.38 மில்லியனை உள்ளீடு செய்தமையின் மூலமாக உள்நாட்டுச் சந்தையில் தலையிட்டது. இதன்படி, மத்திய வங்கி, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 768.16 மில்லியனை நிரம்பல் செய்தது.

3. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

மத்திய வங்கியின் தற்போதைய நாணயக் கொள்கை நிலையின் மட்டங்களுக்கு ஏற்ற விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் குறிக்கோளுடன் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது குறைந்தபட்ச தளம்பல்களுடன் கொள்கை வீத வீச்சிற்குள் பொருத்தமான விதத்தில் பேணப்பட்ட போதும், பெயரளவு வரி கொடுகடன் பிரச்சினையின் காரணமாக கொள்கைவீத வீச்சின் மேல் எல்லை மீறப்பட்டிருக்கிறது. (வரைபடம் 1) நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் ஆரம்பப் புள்ளியான நாளாந்த திரவத்தன்மை எதிர்வு கூறலில் காணப்பட்ட தவறின் அளவும் கூட இலக்கிடப்பட்ட மட்டங்களுக்குள் பேணப்பட்டது. நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், முக்கியமாக நாணய தொழிற்பாட்டுக் கருவியான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் முக்கியமாகத் தங்கியிருக்கும் அதேவேளையில், வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தை ஏலங்கள் என்பனவற்றினூடாக தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்த முடியாமையிலிருக்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் தொடர்ந்தும் கிடைக்கச் செய்யப்பட்டன. ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் திசெம்பரின் இறுதிப்பகுதியிலும் பணச்சந்தையில் மிகையான திரவத்தன்மை காணப்பட்ட வேளையில், இம்மிகையான திரவத்தன்மையானது, ஓரிரவு குறுங்கால மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்கள் மூலமாக தற்காலிக அடிப்படையிலும் ஏலங்களினூடான திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் மூலமாக நிரந்தர அடிப்படையிலும் ஈர்த்துக் கொள்ளப்பட்டன. ஆண்டின் எஞ்சிய பகுதியில் நிலவிய திரவத்தன்மை பற்றாக்குறையினை கவனத்திற் கொண்டு மத்திய வங்கி ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களையும் சந்தைக்கு திரவத்தன்மையினை நிரம்பல் செய்யும் பொருட்டு திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவுகளுக்கான ஏலங்களையும் நடத்தியது.

வரைபடம் 1: சந்தை தொழிற்பாடுகள், கொள்கை வட்டிவீத வீச்சு மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்



வகை	ஏலங்களின் நேரங்களின் எண்ணிக்கை	ஏற்றுக்கொள்ளப் பட்ட தொகை (ரூ.பில்.)	நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%)
ஓரிரவு மீள்கொள்வனவு	11	151.82	7.42 - 7.50
ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு	136	3,949.72	6.59 - 8.50
குறுங்கால மீள்கொள்வனவு (2 இலிருந்து 7 நாட்கள்)	3	47.00	6.29 - 6.50
நீண்ட கால மீள்கொள்வனவு (7 நாட்களுக்கு	14	53.10	6.37 - 6.55
திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை	9	39.60	6.47 - 6.77
திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவு	78	15.77	8.65 - 9.95
துணைநில் வைப்பு வசதி	241	5,572.70	
துணைநில் கடன் வழங்கல் வசதி	203	3,208.35	

அட்டவணை 4.9: திறந்த சந்தை ஏலங்கள் மற்றும் துணைநில் வசதிகள்

வினைத்திறன்மிக்க வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை உறுதிப்படுத்துவதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுகின்ற 25 வர்த்தக வங்கிகளுக்கும் 8 முதனிலை வணிகர்களுக்கும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைக் கணக்கு வசதிகளை வழங்கி வருவதன் மூலம் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற வகிபாகத்தினை மத்திய வங்கி ஆற்றக்கூடியதாக இருக்கின்றது. அரசிற்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகம் தொடர்பான அதன் வகிபாகத்தினை ஆற்றும் விதத்தில் உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், அரச திணைக்களங்கள், முகவர்கள், நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவர்களுக்குத் தேவையான வங்கித் தொழில் வசதிகளையும் வழங்கியது. இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2016 இறுதியில் 61 ஆகக் காணப்பட்டது. ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டின் அடிப்படையில் அரசிற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களின் வழங்கலுக்கும் உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம் வசதியளித்தது. இது 2016இல் ரூ.185.1 பில்லியனாகக் காணப்பட்டது.

பணத்தரகர்களின் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் 9 தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. 2016இல் பணச் சந்தை நடவடிக்கைகளின் கண்காணிப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு பணத்தரகர்கள் தமது அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தரவுகளை அதேநேர கணணி முறைமையில் அறிவிப்பதற்கு உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் ஒழுங்குகளை செய்திருக்கிறது.

4. வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

I. ஆண்டு நடவடிக்கைத் திட்டம்:

வளர்ச்சியடைந்துவரும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக, புதிய கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் போட்டித்தன்மை வாய்ந்த அநுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக உலக மயமாக்கப்பட்ட வியாபாரச் சூழலொன்றில் இலங்கையில் வியாபார நம்பிக்கையினை மேம்படுத்துதல்.

II. மைல்கற்கள்:

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கும் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ மசோதாவிற்குமிடையிலான வேறுபாடுகள் அடையாளம் காணப்பட்டதுடன் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் தொடர்பான மற்றைய நாடுகளின் தகவல்களும் சேகரிக்கப்பட்டன. நிதியமைச்சிற்குத் தேவையான வசதிப்படுத்தல்கள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்படுவதற்காக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கான வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வர்த்தமானி அறிவித்தல்களும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.

- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்கள் அத்தகைய கணக்குகளிலிருந்து இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட பிணையங்களைக் கொள்வனவு செய்ய, உடமையில் வைத்திருக்க, மாற்றல் செய்யவும் மூலதனத்தன்மை கொண்ட வேறு ஏதேனும் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் நடைமுறைக் கணக்குகள் தொடர்பான (மூலதனம் அல்லாத) கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கொடுப்பனவுகளை செய்யவும் அதற்கேற்றவிதத்தில் இலங்கைக்கு வெளியே எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி நிதியியனை அனுப்புவதற்கும் அனுமதியளிக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் புதிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையில் வதியும் தனிப்பட்ட ஒருவர் ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்களை தனது உடமையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கின்ற வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு என்பனவற்றின் உடமையாளர்கள், வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் இரட்டைப் பிரசா உரிமையைக் கொண்டுள்ள பிரசைகள் (அத்தகைய தனிப்பட்டவர்கள் அவர்களது நிரந்தர வதிவிடம் இலங்கைக்கு வெளியே இருப்பதனை நிரூபிக்குமிடத்து) ஆகியோர் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

- 2016.05.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், 1993.03.26ஆம் திகதியிடப்பட்ட இல.759/15 கொண்ட அரச வர்த்தமானி மூலம் வழங்கப்பட்ட விதிவிலக்கல் இரத்துச் செய்யப்பட்டதுடன் ஏற்றுமதியாளர்கள் வெளிநாடுகளில் வைத்திருந்த ஏற்றுமதிப் பெறுகைகளை ஏற்றுமதி செய்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள் இலங்கைக்கு கொண்டு வரவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும், ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டில் வைத்திருக்கும் அத்தகைய ஏதேனும் பெறுகைகளை 2016.05.01 இற்குப் பிந்தாமல் தாய்நாட்டிற்கு அனுப்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

- இதனைத் தொடர்ந்து, 2016 ஒகத்து 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புவதற்குப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் 90 நாட்களிலிருந்து ஏற்றுமதித் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு அதிகரிக்கப்பட்டதுடன் 120 நாட்கள் நிறைவடைந்த பின்னர் ஏதேனும் சட்ட மீறல்களுக்கெதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் மத்திய வங்கி 30 நாட்கள் கொண்ட சலுகைக் காலத்தினை வழங்கலாம். மேலும், ஏற்றுமதிப் பெறுகைகளைக் கண்காணிக்கும் நோக்கத்திற்காக ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி தொடர்பான ஆவணச்சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஏனைய அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

- இராசதந்திர தூதரகங்களின் விசாக் கட்டணத்தினையும் இராசதந்திர ஆளணியினருக்குச் சொந்தமான ஊர்திகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்காமலே அனுப்புவதற்கும் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் இராசதந்திர ரூபாக் கணக்குகளிலுமுள்ள நிதிகளைப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளினூடாக இலங்கையில் முதலீடு செய்வதற்கும் அவர்களை அனுமதிக்கின்ற விதத்தில் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு புதிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- பணம் கடன்வழங்கல், பாதுகாப்பு முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிப்பட்ட நிறுவனங்களின் தனிப்பட்டவர்களுக்கான ஆலோசனை என்பன உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளை வழங்குகின்ற துறைகளில் தொழிற்படுகின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட, கம்பனிகளில் செய்யப்படவுள்ள வெளிநாட்டு முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன (எனினும், பணம் கடன்வழங்கல் கட்டளைச் சட்டத்தின்படி, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவர் இலங்கையில் பணம் கடன்வழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிதி அமைச்சரின் முன்னொப்புதல் தேவைப்படுகிறது).

- பாதுகாப்பு முகாமைத்துவம் தனிப்பட்ட அல்லது தனியார் நிறுவனங்களுக்கான மதிப்பீடு மற்றும் ஆலோசனை உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளை வழங்குகின்ற மேற்பார்வைக் கம்பனிகளில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன.

- 2013.06.12இற்கு முன்னதாக நிரந்தர வதிவிட விசாவில் புலம்பெயர்ந்த இலங்கையர்கள் ஓய்வுகால நன்மைகள், பணிக் கொடை நன்மைகள், வட்டி உள்ளிட்ட நடைமுறை வருமானம், பங்கிலாபங்கள், ஓய்வூதியம், வாடகை, குத்தகை வாடகை மற்றும் 2013.06.12 இற்குப் பின்னர் இலங்கையில் பெறப்பட்ட இலாபங்கள் என்பனவற்றினை அவர்களது தொடர்பான வதிவற்றோர் தடுத்துவைத்தல் கணக்கினூடாக, தகைமையுடைய புலம்பெயர் படிகளிலிருந்தான கழிவு இல்லாமலேயே அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

- 2016 யூன் 12இற்குப் பின்னர் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்ற இலங்கையர்கள் அவர்களுக்கு உரித்துடைய புலம்பெயர் படிகளை இலங்கையில் முதலீடு செய்வதற்காக பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

5. நாணயத் திணைக்களம்

I. ஆண்டு நடவடிக்கைத் திட்டம்:

- பொருளாதார வளர்ச்சியினை வசதிப்படுத்துதல் மற்றும் நாணய முகாமைத்துவத்தினையும் தொழிற்பாட்டு செயன்முறையினையும் மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக கொடுப்பனவு சாதனமாக நாணயத்தினை வழங்குதல்.

II. மைல் கற்கள்:

- வார்ப்புக்கான கிரயத்தினை குறைப்பதற்காக புதிய நாணயத் குத்தித்தொடர் ஒன்றினை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதி அமைச்சரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. விலைக்கோரல் மதிப்பீட்டுச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நாணயச் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்கான சபைப் பத்திரமானது தயாரிக்கப்பட்டுள்ளது.

- நாணய தொழிற்பாடுகளின் வினைத்திறனினை மேம்படுத்தும் நோக்கில், புதிய நாணய செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள், புதிய நாணயத் தாள்களை துகள்களாக்கும் எந்திரம் மற்றும் நாணயத் தாள் கட்டுக்களை சிப்பமாகக்கட்டுவதற்கான சுருக்கிச் சுற்றும் முறைமை போன்றவை கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

III. செயற்பாடு: 01.01.2016 இலிருந்து 31.12.2016 வரை

விடயம்	பெறுமதி (ரூ. பில்லியன்)
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத் தாள்கள்	594.00
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகள்	1.57
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்கள்	534.50

விடயம்	எண்ணிக்கை
போலி நாணயத் தாள் தொடர்பில் சான்றுகளை வழங்குவதற்காக பிரசன்னமாகிய நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை	12
நாணயத் தாள்களின் பாதுகாப்பு பண்புகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்/ கருத்தரங்குகளின் எண்ணிக்கை	45

அட்டவணை 4.10: செயற்பாடு: 01.01.2016 இலிருந்து 31.12.2016 வரை

6 வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

I. ஆண்டு நடவடிக்கைத் திட்டம்: உரிமம்பெற்ற வங்கிகளின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துதல்.

II. மைல்கற்கள்:

- வங்கித்தொழில்துறை மற்றும் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக உரிமம்பெற்ற வங்கிகள் இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களை வர்த்தகப்படுத்தல், சைபர் பாதுகாப்பு சம்பவங்களை அறிக்கையிடல், பாசல் III இன் கீழான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களைக் காட்சிப்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கான 5 சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.
- முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 12 பரீட்சிப்புக்கள் உட்பட 2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 44 பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன. வங்கிகளின் மூத்த முகாமைத்துவத்துடனான தனித்தனியான வழமையான கலந்துரையாடல்களுக்குப் பின்னர் 2016இல் 38 பரீட்சிப்புக்கள் நிறைவடைந்து நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- 2016 ஆண்டுப் பகுதியில் 67 புதிய கிளைகளையும் 51 மாணவர் சேமிப்புப் பிரிவுகளையும் 3 செல்லிட வங்கித்தொழில் பிரிவுகளையும் ஆரம்பிப்பதற்கும் 146 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கும் 97 கிளைகளை வேறு இடங்களில் அமைப்பதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.
- பொருத்தமான மேற்பார்வை மற்றும் சீர்ப்படுத்தல் நடவடிக்கைகள் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கிகளின் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளின் மூத்த முகாமைத்துவத்துடன் கிரமமான அடிப்படையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

மேற்பார்வைக் கட்டமைப்பினையும் முறைமையின் உறுதித்தன்மையினையும் வலுப்படுத்துவதற்காக துணை ஆளுநரைத் தலைவராகக் கொண்ட சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களுடன் காலாந்தரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- 2016ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து 5,600 இற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்காக 47 விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தி அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தகவல் சிற்றேடுகளை விநியோகித்ததுடன் பொதுமக்களின் பார்வைக்காக 500 சுவரொட்டிகளையும் காட்சிப்படுத்தியது. பொதுமக்களுக்கான அறிவித்தலொன்று அனைத்து மூன்று மொழிகளிலும் 16 செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டதுடன் சட்டத்திற்கு முரணான முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பில் 5 வானொலி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக திணைக்களம் வள ஆளணியினரையும் வழங்கிற்று.

- வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் 4 பன்னாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வள ஆளணியினராகக் கலந்து கொண்டதுடன் 2016 ஆண்டு காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பூட்டானின் றோயல் நாணய அதிகாரசபையின் அலுவலர்களுக்காக ஒரு திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தையும் நடத்தியது. மேலுள்ளவற்றுக்குப் புறம்பாக, பல்கலைக்கழக மாணவர்களுக்காக 2 உள்ளகப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வசதிப்படுத்தியது. (தயவுசெய்து வரைபடங்களிற்காக இணைப்பு III இனைப் பார்க்கவும்).

7 ஊழியர் சேம நிதியம்

I. ஆண்டு நடவடிக்கைத் திட்டம்: நிதியத்தின் பாதுகாப்பினைப் பேணுகின்ற அதேவேளையில் அதியுயர் ஓய்வூதிய நன்மைகளினை அங்கத்தவர்களுக்கு பெற்றுக்கொடுத்தலும் பங்குதாரர்களின் திருப்தி மட்டத்தினை உச்சளவில் உறுதிப்படுத்துதலும்.

II. மைல்கற்கள்:

- ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர்களுக்குத் திறமையான சேவை, உயர்மட்ட வருவாயை பாதுகாப்பதற்கான வினைத்திறனானதும் விளைத்திறனானதும் நிதிய முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இடர்முகாமைத்துவ இயலுமை, மற்றும் அத்தியாவசிய தொழில்நுட்பம்சார் உட்கட்டமைப்பு என்பவற்றினை உள்ளடக்கிய நிறுவனம்சார் திறனை அதிகரிப்பதற்கான படிமுறைகளை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.
- மதிப்பிடப்பட்ட தரவுகளின்படி, 2016ஆம் ஆண்டிற்காக ஊ.சே. நிதியத் திணைக்களம் ஏறக்குறைய 11 சதவீதமான வருவாய் வீதத்தினை ஈட்டியுள்ளது. எனவே, ஏறக்குறைய 10 சதவீதமான அங்கத்தவர் வருவாயினை பேணக்கூடியதாகவுள்ளது.

8 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

I. ஆண்டு நடவடிக்கைத் திட்டம்: பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக மீள்நிதியிடல் திட்டங்களையும் வட்டி உதவு தொகை/ கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களையும் இணைத்தல், வசதியளித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், கொடுகடன் துணைநிரப்புப் பணிகளை வழங்குதல் மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமச்சீரான வளர்ச்சியை எய்துவதற்கும் நாட்டில் நிதியியல் வசதிகளை வழங்குவது தொடர்பான விடயங்களை அதிகரிப்பதற்கும் விழிப்புணர்வு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்.

II. மைல்கற்கள்:

- அடிப்படைத்தன்மையினை சிறந்த முறையில் விளங்கிக் கொள்ளும் பொருட்டு அல்லது அனைத்து மக்களும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமைப்படுத்தல் என்ற கருத்தினைத்தரும் நிதியியல் உள்ளமைப்பிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய உபாயமொன்றினை உருவாக்கும் நோக்குடன் நிதியியல் வசதிகளின் முக்கிய குறிகாட்டிகளின் நியதிகளின் ஆரம்பப் புள்ளிகளில் நிதியியல் உள்ளடக்கத்தின் மீது நாடளாவிய ரீதியில் அளவீடுகள் நடத்தப்பட்டு கேள்விப்பக்கத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இத்தேசிய உபாயம் நாட்டின் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக அனைத்து ஆர்வலர்களும் ஒரே நோக்கில் தொழிற்படுவதனை இயலச்செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பிரதேச அலுவலகங்களின் உதவியுடன், இலங்கை மத்திய வங்கி, சமூகம் சார்ந்த பலநோக்கு ஆர்வலர் வியாபார தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்டமொன்றாக தோட்டக்கலை மற்றும் சேதன வேளாண்மைத் துறைகளில் பொருத்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளை ஏற்படுத்துவதற்காக வேளாண்மையாளர் சமூகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது.
- தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு வலுவூட்டுவதற்காகவும் தொழில் வாய்ப்பிற்குமான கடன் திட்டமான "தருண திரிய" இன் கீழ் கடன்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிப் பயிர்ச்செய்கையாளர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழ் (i) பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி வேளாண்மை மூலதனக் கடன் திட்டம் மற்றும் (ii) பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மைக் கடன் திட்டம் (கூறு 1: சந்தைப்படுத்தல் சங்கிலி அபிவிருத்தி மற்றும் இணைப்புக்கள்) என்பனவற்றிற்காக கடன்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பதிவுசெய்யப்பட்டன.
- அதிகரித்துவரும் வேளாண்மை உற்பத்தியாக்கம், மேம்பட்டு வருகின்ற சந்தைகளை அடையும்தன்மை மற்றும் சிறு உடமை வேளாண்மையாளர் மற்றும் வேளாண் வியாபாரங்களின் பெறுமதிகூட்டல்களின் அதிகரித்துவரும்தன்மை என்பனவற்றிற்கு உதவும் பொருட்டு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்படவுள்ள வேளாண்மை நவீனமயப்படுத்தலை செயற்படுத்தும் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- கிராமிய மட்டத்தில், நுண்பாக மட்டத்திலுள்ள தொழில்முயற்சியாளர்களைக் கவனத்தில் கொண்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பனவற்றிற்காக "சுயசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கி" என்ற புதிய கடன் திட்டத்திற்குச் சட்ட இசைவுகள் பெறப்பட்டு வரைவு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- சூரிய வலுவினூடாக 2020 அளவில் 200 கி.வா இனை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்குமொருமுறையாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து எதிர்பார்க்கப்படும் நிதியிடலுடன் புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தும் செயன்முறைகளில் ஈடுபட்டிருக்கிறது. இது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இலங்கை நீடித்துநிலைத்திருக்கும் வலு அதிகாரசபை மற்றும் ஏனைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் நாட்டின் சூரிய கூரை வலு உருவாக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடன் திட்டத்தினை 2017 - 2020 காலப்பகுதியில் நடைமுறைக்கிடப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

  (தயவுசெய்து மூலதன வரவு செலவுத்திட்டம் மற்றும் ஏனைய மூலங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்திற்காக இணைப்பு IV இனைப் பார்க்கவும்).

9 நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் 2006இல் நிறுவப்பட்டதுடன் 2007 மாச்சிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்குள் ஒரு திணைக்களமொன்றாக தொழிற்பட்டு வருகின்றது.

I. தகவல்களைப் பெறுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்.

2016இல் அறிக்கையிடும் நிறுவனங்கள் ரூ.1.0 மில்லியனுக்கும் அதற்கு மேற்பட்ட காசு கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணய மாற்றல்கள் பற்றி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு தொடர்ந்தும் அறிக்கையிட்டன. மேலும், 759 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல்கள் பெறப்பட்டதுடன், 436 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

II. அறிக்கையிடும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல்

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், 2016 சனவரி 27ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளரை நெருக்கமாக கவனியுங்கள்) விதிகள், இடர்நேர்வினை அடிப்படையில் கொண்ட அணுகுமுறையினை அடிப்படையில் கொண்டு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வு என்பனவற்றை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்து, முகாமைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டன. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் நியதிகளில் நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு மதிப்பீட்டினை மேற்கொண்டதுடன், அதற்கிணங்க வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகள் தொடர்பில் 13 பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

III. புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடல்

நிதியியல் உளவறிதலை பரிமாறிக்கொள்வதன்/ பெற்றுக்கொள்வதன் பொருட்டு 2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உள்நாட்டு முகவர்களுடனும் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பன்னாட்டு இணைத்தரப்பினர்களுடனும் மேற்கொண்டது. இதன்படி, வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் உள்நாட்டு முகவர்களுடனும் நிதியியல் உளவறிதல் பிரிவு கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2016 இறுதியில் முறையே 32 ஆகவும் 04 ஆகவும் காணப்பட்டது.

IV. நிறுவன ரீதியான இயலளவை கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு நடத்திய 29 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வங்கிகள் மற்றும் நிதியியல் கம்பனிகளிலிருந்து 1638 இற்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். மேலும், தற்போதைய மற்றும் தோற்றம் பெற்றுவரும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரச்சனைகள் தொடர்பான நிபுணத்துவத்தையும் அறிவினையும் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் வங்காளதேசம் மற்றும் மாலைதீவிலிருந்து வந்த நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு இரண்டு சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இவ்வாண்டுப்பகுதியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழித்தல் மீதான வருடாந்த மாநாடு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் கம்பனிகளின் இணங்குவிப்பு தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள 125 அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது.

V. ஏனைய நடவடிக்கைகள்

2014/15 காலப்பகுதியில், இலங்கை தொடர்பில் நடத்தப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டின் மூன்றாம் சுற்றில் எடுத்துரைக்கப்பட்ட குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2016ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு பின்வரும் முக்கிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

அ. அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2015 - 2020 காலப்பகுதிக்காக தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஒழித்தல் கொள்கையை பின்பற்றியமை.

ஆ. பரஸ்பர மதிப்பீட்டின் அடிப்படையில் தொடர்பான ஆர்வலர்களின் ஆலோசனையுடன் நிறுவன ரீதியான நடவடிக்கைத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தமை.

இ. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைசெய்தல் சட்டம் என்பனவற்றிற்கு திருத்தங்களை விதந்துரைப்பதற்காக சட்ட மீளாய்வுக் குழுவானது மீள உருவாக்கப்பட்டது.

ஈ. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் தகைமைகளுக்கான வாடிக்கையாளர்களை நெருங்கிக் கண்காணிக்கும் விதிகளை இறுதிப்படுத்தியமை.

உ. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கான திருத்தங்கள் சட்ட மீளாய்வுக் குழுவினால் இறுதியாக்கப்பட்டமை.

4.8 முன்மொழிப்பட்டுள்ள இ.பி.ப.ஆ. சட்டம்

இ.பி.ப.ஆ உத்தேச சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை மீளாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை குழுவானது மீளாய்வாண்டில் ஓர் வெளிப்பாட்டு வரைவினை ஒன்றினைத்து வெளிநாட்டு முறைமைப்படுத்தல் முகவர்கள் உள்ளடங்களாக இணங்காணப்பட்ட பங்காளிகளிடம் இருந்து நிபுணத்துவ கருத்துக்களை கோரியது. தற்போது வரைவானது பொது மக்களின் விமர்சனத்திற்காக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இ.பி.ப.ஆ இதனை மீளாய்வு செய்கின்றது. வரைபு சட்டத்தை மறுபரிசீலனை செய்ய திரு. கே. கணீஸ்வரனது தலைமையில் உருவாக்கப்பட்ட ஆலோசனை கமிட்டியினால் இறுதிப்படுத்தப்படுகின்றது.

புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவை

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் வரைவு நீதிபதி சலீம் மர்சூப் அவர்களின் வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பரிசீலனைக் காலப்பகுதியில் வரைபானது பொதுமக்களின் கருத்துக்கள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிசெய்யும் நிலையில் உள்ளது.

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் நிர்வகிப்பு

பட்டியற்படுத்தப்பட்ட 3 கம்பனிகள் தொடர்பாக கட்டாயக் கொடைமுனைவுகளையும் 2 கம்பனிகளது தன்னார்வ கொடைமுனைவுகளையும் நிர்வகித்தோம்.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பங்குத் தரகர் விதிகளது மீளாய்வு

பட்டியலிடல் விதிகள் மற்றும் பங்குத் தரகர் விதிகள் தற்போது மீளாய்வு செய்யப்பட்டவண்ணமுள்ளன. ஓர் ஆரம்ப பொதுவழங்கலில் திறமையான விலையினை கண்டுபிடிப்பதற்காக கடைப்பிடிக்கப்படும், பிணையங்களுக்கான கேள்வியினை பதிவுசெய்யும் புத்தக கட்டமைப்பு விதிகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணக்கமடைவதற்கு சந்திக்கவேண்டிய அனைத்து நியமங்கள் என்பவற்றில் ஓர் விசேட மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ. சட்டத்தை உள்வாங்கும் வரை
புத்தக கட்டமைப்பு விதிகளை அறிமுகப்படுத்தலை காத்திருக்க முடிவுசெய்துள்ளது.

<u>பணிப்புரைகள்</u>

முதலீட்டாளர் நலன்களை பாதுகாப்பதற்கும் நியாயமான சந்தையை உருவாக்கி பராமரிப்பதற்கும் பின்வரும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இ.பி.ப.ஆ மேற்கொண்டது

டீ.கே.எஸ் நிறுவனத்திற்கு 1987 ம் ஆண்டின் (திருத்தப்பட்ட) இ.பி.ப.ஆ வின் சட்ட இல 36 இன் பிரிவு 13 (உ) பிரிவு 13 (ஊ) ஆகியவற்றின் படி வழங்கப்பட்ட பணிப்புரைகள்.

இ.பி.ப.ஆ பங்குத்தரகருக்கு அவரது முகவரை உடனடியாக முதலீட்டு ஆலோசகராக செயற்படுவதை "முதலீட்டாளர் கண்" "ஆயோஜன குரு" அல்லது வேறு ஏதாவது பெயரில் எம்மொழியிலாவது பொதுமக்களுடன் தொடர்புகொள்வதனை நிறுத்துமாறு பணிக்கப்பட்டது.

இது அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு வெளியே செயல்படுகிறார் என்ற அடிப்படையில் பணிப்புரை வழங்கப்பட்டது.

கெபிடல் ட்ரஸ்ட் செக்யுரிடீஸ் பிறைவேட் லிமிடெட்க்கான பணிப்புரைகள்

இ.பி.ப.ஆ பங்குத்தரகர் ஒருவரை ஒரு வாடிக்கையாளரின் விற்பனையை நிறுத்துமாறு உத்தரவிட்டது. அவ்வாடிக்கையாளர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தை குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

ஓர் புலன் விசாரணையானது நிறைவடையும் வரை வாடிக்கையாளரது கணக்குகளில் உள்ள பு; டயமன்ட் ஜுவலரி வேல்ட்வைட் பி.எல்.ச யின் அனைத்து பங்குகளையும் நிறுத்திவைப்பதற்கு கொ.ப.ச பணிக்கப்பட்டது

கிளரிட்ஜ் நிறுவனத்திற்கு 1987 ம் ஆண்டின் (திருத்தப்பட்ட) இ.பி.ப.ஆ வின் சட்ட இல 36 இன் பிரிவு 13 (உ) பிரிவு 13 (ஊ) ஆகியவற்றின் படி வழங்கப்பட்ட பணிப்புரைகள்.

ஓர் பெருந்தோட்ட கம்பனியின் கட்டுப்படுத்தும் அல்லது உரித்துவத்தினை ஒரு வாடிக்கையாளர் உரிய அதிகாரம் இன்றி விற்பனை செய்ததாக ஓர் முறைப்பாடு கிடைக்கப்பெற்றதன் நிமித்தம் இ.பி.ப.ஆ இந்த விடயம் பரிசீலிக்கப்படும் வரை பங்குத்தரகர் ஒருவருக்கு வாடிக்கையாளருக்கு சேரவேண்டிய விற்பனையை நிறுத்தி வைக்குமாறு பணித்தது.

கொ.ப.ச மற்றும் பங்குத்தரகுக் கம்பனிகள் (கடன்பத்திரங்களில் மாத்திரம் வர்தகம் செய்ய உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் தவிர) இடர் அடிப்படையிலான போதிய மூலதன தேவைகள் தொடர்பாக இ.பி.ப.ஆ வின் சட்டப் பிரிவு 13 (உ) பிரிவு படி வழங்கப்பட்ட அறிவுறுத்தல்.

இ.பி.ப.ஆ வின் கடன்பத்திரங்களில் மாத்திரம் வர்த்தகம் செய்ய உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் தவிர அனைத்து உரிமம் அளிக்கப்பட்ட பங்குத்தரகளுக்கான குறைந்த பட்ச போதிய மூலதன தேவைகளுக்கான விதிகளை செயற்படுத்த அளித்துள்ளது.

விதிகளின்படி அனைத்து பங்குத்தரகு நிறுவனங்களும் கடன்பத்திரங்களில் மாத்திரம் வர்த்தகம் செய்ய உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் தவிர குறைந்த பட்ச போதிய மூலதன விகிதம் 1: 2 என பேணிக்கொள்ளவும் ஆகக் குறைந்த திரவ மூலதனம் 35 மில்லியனாகவும் காணப்பட வேண்டும். அத்தோடு போதிய மூலதன விகிதம் மற்றும் திரவ மூலதனம் கணிப்பிடும் முறை விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசஇ பிராந்தியஇ உலகலாவிய நிதிகளுக்கு ஒப்புதல் வழங்குதல்

பரிசீலனை காலத்தில் இ.பி.ப.ஆ இலங்கையில் பட்டியல்படுத்தப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்ய 121 உலகலாவிய மற்றும் பிராந்திய நாடளாவிய நிதியங்களுக்கு அனுமயளித்தது. அத்துடன் 50 பெயர் மாற்றங்களும் குறிக்கப்பட்டது.

கொ.ப.ச விதி இல 5.4 (டி) பட்டியல் விதிகளுக்கு அமைய விடுவிப்புகள்

இ.பி.ப.ஆ னது பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனிகள் தனிப்பட்ட வழங்கள் ஊடாக பங்குகளை வழங்குவதற்கு அனுமதிகோரும் போது இத்தகைய வழங்களின் பின்னர் உடனடியாக இத்தனிப்பட் வழங்கல்கள் 20மூ விஞ்சியிருக்குமாயின் அதற்கான விடுவிப்பு வழங்கல்களுக்கான விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ செயல்முறைப்படுத்துகின்றது. மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ஓர் கம்பனிக்கு அதன் ஒன்றிணைத்தல் திட்டத்தின் ஒரு அங்கமாக ஓர் துணைக்கம்பனியினை கம்பனியுடன் ஒன்றினைப்பதற்காக ஓர் பங்கு பங்கு மாற்றத்திற்கான விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொ.ப.ச.யின் பட்டியலில் இருந்து பொதுக்கம்பனிகளை நீக்குதல்

இ.பி.ப.ஆ வின் பட்டியலில் இருந்து நீக்குதல் விதிகளின் படி பின்வரும் நிறுவனங்களை பட்டியலில் நீக்க ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது

இக்விட்டி வன் பி.எல்.சி
மெட்ரோபொலிடன் ரிசோர்ஸ் கோல்டிங்ஸ் பி.எல்.சி

ஓர் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடான ஆகக்குறைந்த பொது உரித்துடைமையானது பராமரிப்பதனை கண்காணித்தல்

1987 ம் ஆண்டின் (திருத்தப்பட்ட) இ.பி.ப.ஆ வின் சட்ட இல 36 இன் பிரிவு 13 (உ) பிரிவு 13 (உஉ) ஆகியவற்றின் படி அனைத்து பட்டியளிடப்பட்ட கம்பனிகளும் ஆகக்குறைந்த பொது உரித்துவத்திலான விதிகளினது மீளாக்கம் தொடர்பாக இ.பி.ப.ஆ பணிப்புரை ஒன்றை வழங்கியது. ஆத்துடன் பிரதான பலகை மற்றும் திரி சவி பலகையில் உள்ள கம்பனிகளுக்கு ஓர் செம்மையாக்கப்பட்ட புழக்க அடிப்படையிலான சந்தை மூலதனவாக்கத்தை அடிப்படையாகக்கொண்ட மீளமைக்கப்பட்ட நிலை எல்லை தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இந்த மீளமைக்கப்பட்ட நிலை எல்லைகளுக்கு அமைவுறுமாறு கம்பனிகளுக்கு 30 ஜுன் 2017 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வலியியுறுத்தல்

ஆணைக்குழுவின் வழிகாட்டுதல் மற்றும் தீர்மானங்களுக்கமைய இ.பி.ப.ஆ னால் வலியுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மதிப்பிற்குறிய சட்டமா அதிபரின் முன்னால் வலியுறுத்தல் நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன

மதிப்பிற்குறிய சட்டமா அதிபருக்கு மூன்று விடயங்களை நீதிமன்ற செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை கோரியுள்ளது.

சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ள விடயங்கள்

ஓர் புலனாய்வு தொடர்பாக சட்டப் பொருள்விளக்கத்தை கோரும் ஓர் அபிப்பிராயமும் இ.பி.ப.ஆ னால் நடாத்தப்பட்ட ஓர் ஆரம்ப விசாரணை தொடர்பாக வேண்டப்பட்ட இன்னுமோர் அபிப்பிராயமும் நிலுவையில் உள்ளன.

வழக்காடல் - பின்வரும் வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன

- ஆயபிநம நுஒிழசவள (சளையவந) டுஅவைநன எள. ளுநுஉ - ர்உஅஉயு 217/2007
- ளுநுஉ எள. ஆசையஅயச டீநயஉா ர்ழவநடள ீடுஉ யனெ ழவாநசள ஆஉ - ளு.:.72082.:.2010 ரூ S/72083/2010
- மு.ஊ. ஏபையெசயதயா எள. ளுவயனெயசன ஊாநஅஉையடள ீடுஉ யனெ ழுவாநசள -CHC/CO/09/2016
- நுவெசரளவ ஊயிவையட ஆயசமநவள (சளையவந) டுஅவைநன எள. ளுநுஉ - CA/MISC/2/2016

- வுயடடை வுயறகஙை யுட யேமடை எள. ஊளுநு யனெ வாந ளுநுஊ - DSP 20/16
- ஆரை ஆயழெழ ஆநடஎயனெ எள. ளுநுஊ யனெ ழுவாநசள CA Writ Application 340/2016

சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு உரிமமளித்தல்Æபதிவீடளித்தல் மற்றும் அவர்களில் மேற்பார்வை

சந்தைப் பங்குபற்றுனர்களுக்கான உரிமமளித்தல்Æபதிவீடளித்தல் பற்றிய விபரங்கள் மற்றும் பங்குத் தரகுக் கம்பனிகள் மற்றும் ஏனைய சந்தை பங்குபற்றுனர்கள் தொடர்பாக 2016 ஜனவரி 01 முதல் 2016 டிசெம்பெர் 31 வரையான காலப்பகுதியில் தளத்திலான பரிசீலனைகள் மற்றும் தளத்திற்கப்பாலான மீளாய்வுகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	தளத்திற்கான விஜயங்களது மொத்த எண்ணிக்கை	தளத்திற்கப்பாலான மீளாய்வுகளின் மொத்த எண்ணிக்கை	புதுப்பித்தல்கள்	புதிய உரிமங்கள்
பங்குத் தரகர்கள் மற்றும் கடன் தரகர்	17	666*	35	-
பங்கு வர்த்தகர்கள் மற்றும் கடன் வர்த்தகர்	0	-**	12	-
எல்லைக் கடன் வழங்குனர்கள்	19	417	31	-
முதலீட்டு முகாமையாளர்கள்	13	131	29	1
கடன் தரப்படுத்தல் முகவர்கள்	1	10	2	-
ஒப்புரவாளர்கள்	4	32	8	-
தீர்வக இல்லம்	-	4	1	-
நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்	38	945	-	1
நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள்	7	168	-	-
	99	2373	118	2

அட்டவணை 4.11: சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு உரிமமளித்தல்Æபதிவீடளித்தல் மற்றும் அவர்களில் மேற்பார்வை

மூமாதாந்த கூற்றுக்கள் மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கைகள்
மூமூபங்கு Æகடன் வர்த்தகர் தொடர்பான நிதியியல் தகவல்கள் பங்குÆகடன் தரகர்களிடமிருந்து பெறப்பட்ட மாதாந்த கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் பங்குÆகடன் தரகர்களது தகவல்களுடன் கூட்டாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

இணக்கப்பாட்டு மீளாய்வுகள் மற்றும் அங்கீகாரங்களது சுருக்கம்

விளக்கம்	ஜனவரி – மார்ச்	ஏப்ரல் - ஜூன்	ஜூலை – செப்	ஒக்டோபர்-டிசம்பர்	மொத்தம்
வெளிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முடிவுறுத்தப்பட்ட மீளாய்வு	29	28	22	34	113
மீளாய்வுகளின் அடிப்படையில் கருத்துரைக் கடிதங்கள்	26	14	18	17	75
மூலதனச் சந்தை தொடர்பாக தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள்	15	10	13	12	50
மூலதனச் சந்தை ஊடாக நிதி திரட்டல் முன்மொழிவுகளிலான மீளாய்வு	9	5	16	9	39
பிரிவு 5.4 இன் கீழான தனிப்பட்ட பிணை ஒதுக்கங்களுக்கான அங்கீகாரங்கள்	-	1	-	3	4
பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவை மதிப்பீட்டு அறிக்கைகளிலான மீளாய்வு	-	1	4	-	5
தளத்திற்கப்பாலான மாற்றல்களுக்கான அங்கீகாரங்கள்	186	148	127	154	615
பிரிவு 29 (யு)[1] இன் கீழான அங்கீகாரங்கள்	1	1	-	2	4
பிரிவு 28 (யு)[2]இன் கீழான அங்கீகாரங்கள்	-	-	2	2	4
பட்டியலில் இருந்து விலகல் விண்ணப்ப மதிப்பீட்டு ஆய்வு	-	-	1	1	2

அட்டவணை 4.12: இணக்கப்பாட்டு மீளாய்வுகள் மற்றும் அங்கீகாரங்களது சுருக்கம்

புலனாய்வுகள்

இ.பி.ப.ஆ வானது 3 விசாரணைகளை 2016ல் முடிவுறுத்தியுள்ளது. முடிவடைந்த 1 விசாரணை அறிக்கை ஆணைக்குழுவிற்கு 2016 நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி 2 விசாரணை அறிக்கைகளும் டிசம்பர் மாதம் 2016ல் முடிவடைந்துள்ளது.

மேலும் 2016 இறுதியில் மேலும் 4 விசாரணைகள் முடியும் தறுவாயில் உள்ள அதேவேளை மற்றைய விசாரணைகளும் பல கோணங்களிலும் நடைபெறுகின்றன.

கண்காணிப்பு

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இ.பி.ப.ஆ குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் மேம்பட்ட கண்காணிப்பு செயன்முறைகள் ஊடாக சந்தை மோசடிகள்.்பாதகமான சூழ்நிலைகளை கண்டுபிடிப்பதற்கும் இதனால் சந்தையில் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தை குறைக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு கொள்கையோடு சார்ந்ததாக இ.பி.ப.ஆ வானது தரகர்கள்.்வர்த்தகர்கள்.்முதலீட்டாளர்களின் அசாதாரண சந்தை நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாக அவர்களது வர்த்தக நடவடிக்கைகள் கண்காணிப்பில் உள்ளதாக அறிவிக்கப்படும்.

கொடுக்கல் வாங்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் அல்லது ஆணை தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் நாங்கள் ஒரு முழுமையான ஆய்வை மேற்கொண்டு அவ்வறிக்கையை கண்காணிப்பு மற்றும் புலனாய்வு குழுவிற்கு சமர்ப்பித்துள்ளோம். குழு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்கின்றோம்.

தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள்

ஆற்றல்மிக்க மற்றும் அறிவுபடைத்த சந்தை தொழில்வல்லுனர்கள் குழாமொன்றை பேணுவதற்காக இ.பி.ப.ஆ. ஓர் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இது உரிமமளித்தல் பரீட்சைகள், பல்வேறு தரப்பினருக்கான நிதியியல் அறிவுசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிணையங்கள் துறையிலுள்ள தொழில்வல்லுனர்களுக்கான தொடர்ச்சியான கற்றல் வாய்ப்புகள் என்பவற்றை வழங்குகின்றது.

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை	நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை
மூலதனச் சந்தை டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்	2	34	25
மூலதனச் சந்தை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்	3	99	15
பதிவீடுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் உரிமமளித்தல் நிகழ்ச்சித்திட்டம்	-	26	11
யுனிட் ட்ரஸ்ட் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்	-	-	-
முதலிடுவதில் உயர்நிலை நிகழ்ச்சித்திட்டம்	1	23	-
முதலிடுவதில் நிகழ்ச்சித்திட்டம்	2	58	-
தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	7	866	-
தங்கப்பதக்கம் ரூ பணப் பரிசுத்திட்டம்	மீளாய்வு ஆண்டில் 7 பல்கலைக்கழகங்களுக்கு தங்கப்பதக்கம் ரூ பணப் பரிசுத்திட்டம் வழங்கப்பட்டது		
மூலதன சந்தை தகவல் மையம்	மூலதன சந்தை தகவல் மையம் தென்கிழக்கு பல்கழையில் ஆரம்பிக்கப்பட்டது		

அட்டவணை 4.13: தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள்

முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

"மூலதனச்சந்தையை திறம்பட கண்காணித்தல் : பிணையங்களிலான மோசடி மற்றும் முறைகேடுகளுக்கான விசாரணை.்வழக்கு தொடரல்" எனும் தலைப்பிலான பிராந்திய மாநாடு

மேற்குறிப்பிட்ட மாநாடு இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஐக்கிய அமெரிக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவோடு இணைந்து செப்டம்பர் மாதம் 2016 19 ம் திகதி முதல் 22 ம் திகதி வரை நடைபெற்றது. இது மூலதன சந்தையை நிறுவகிக்கின்ற நிறுவனங்களின் கண்காணிப்புஇ விசாரணைஇ அமுலாக்கல்களோடு தொடர்புடையவர்களுக்காக வடிவமைக்கப்பட்டதாகும். இம்மநாட்டிற்கு 14 நாடுகளில் இருந்து பெருமளவான பங்குபற்றாளர்களும் அத்தோடு கொழும்புப் பங்குச்சந்தைஇ மத்திய வங்கிஇ சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் அழைப்பையேற்று பங்குபற்றினர்.

மூலதன சந்தை தொடர்பாக தொலைக்காட்சித்தொடர்

சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் மூலதன சந்தை முதலீடு தொடர்பான அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இ.பி.ப.ஆ குழு 18 அத்தியாயங்கள் கொண்ட தொலைக்காட்சி தொடர் ஒன்றை பதிவு செய்ய தொடங்கியுள்ளது. பங்குச்சந்தை முதலீட்டுக்கான அடிப்படை.: அலகுப்பொறுப்பாட்சிகளில் முதலிடல் மற்றும் முதலீட்டாளர்களை பாதுகாத்தல் எனும் தலைப்பில் துறைசார்ந்த வல்லுனர்கள் கலந்துறையாடுவார்கள். இத்தொடர் 23 ம் திகதி ஒக்டோபர் 2016 ம் ஆண்டு தொடக்கம் ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

செய்தித்தாள் ஆக்கங்கள்

இ.பி.ப.ஆ தொடர்ச்சியாக மூலதனசந்தை முதலீட்டுக்கான அடிப்படை தொடர்பாக வாரந்த கட்டுரைகளை தினசரி பத்திரிகைகளான டெய்லி மிரர்இ அத போன்றவற்றிலும் அத்தோடு 200 கட்டுரைகள் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சிகள்

நாம் பல்வேறு சமூகப்பிரிவுகளை இலக்கு வைத்து நிதிக் கல்வியறிவு திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
உயர்தர வர்த்தக பிரிவு மாணவர்கள்	24
பல்கலைக்கழக மாணவர்கள்	13
ஆசிரியர்கள்	18
முதலீட்டாளர்கள்	12
மொத்தம்	**67**

அட்டவணை 4.14: முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சிகள்

மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள்

1. மத்திய எதிர்தரப்பினர் பொறிமுறையின் (ம.எ.த.பொ)அமுலாக்கத்திற்கு வசதியேற்படுத்தல்

- இ.பி.ப.ஆ ம.எ.த.பொ திட்டத்தை செயல்படுத்த உலகவங்கியிடம் நிதித்துறை நவீனமயமாக்கள் திட்டத்தின் கீழ் இருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி பெற்றுள்ளது.

- கொ.ப.ச யின் தற்போதைய வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கை தோற்றம் தற்போதைய சந்தை நிலவரங்களின் நிமித்தம் சந்தை பருமனிலான தாக்கம் விகிதாசார முதலீடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஆகியவற்றை கருத்திற்கொண்டு ம.எ.த.பொ யினது அமுலாக்கத்திற்கு வரிசை முறையான அணுகுமுறை பின்பற்றப்படும்.

- இன்னும் நடப்பில் உள்ள பல வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கைகளை குறைப்பதற்காக விநியோகம் எதிர் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை மற்றும் பெறுமதியான இடர்நேர்கை அடிப்படையிலான எல்லை முறை ஆகியவற்றின் அமுலாக்கத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியின் ஓர் அங்கமாக வணிக மாதிரி சட்ட வடிவமைப்பு எல்லைப்படுத்தல் மற்றும் தீர்பனவு மாதிரி தொடர்பாக மேலதிக ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இவ்விடத்திலான அறிவுரைகள் மற்றும் பரிந்துரைகள் இ.பி.ப.ஆ ம.எ.த.பொ குழுவினால் அமுலாக்கல் கட்டத்தின் போது கருத்திற்கொள்ளப்படும்.

- ம.எ.த.பொ தொடர்பான ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு இ.பி.ப.ஆ ஆணைக்குழு சட்டத்தினுல் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

- ஆலோசகர்களினால் முன்மொழியப்பட்ட ம.எ.த.பொ வரைபு விதிகள் முடிவுறுத்துவதற்கான நிலையில் உள்ளது.

2. தரகர் பின்புல காரியாலயம்(த.பி.கா) மற்றும் ஒழுங்கு மேலாண்மையை செயற்படுத்தல்(ஒ.மே.செ)

- திட்டத்தை செயற்படுத்தும் காலப்பகுதியில் திட்டக்கண்காணிப்பு குழு அமைப்பு விற்பனையாளர்களுடனும் பங்குத்தரகர்களுடனான தொடச்சியான சந்திப்புகளில் த.பி.கா மற்றும் ஒ.மே.செ அமுல்படுத்தலில் உள்ள குறைபாடுகள் ஆராயப்பட்டது.

- கொடுக்கப்பட்ட காலக்கெடுவான 31 மார்ச் 2016 வரைபெரும்பாலான பங்குத்தரகு நிறுவனங்கள் அமைப்பு அமுல்படுத்தலில் "நேரடி நிலை"யை அடைந்திருந்தன.

- அதனைத் தொடர்ந்து இ.பி.ப.ஆ கொ.ப.ச மற்றும் இ.பி.ப.ஆ யில் தொடர்ந்திருக்கம் வெளியக தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் களை உள்ளடக்கியதாக உப கணக்காய்வு கமிட்டி த.பி.கா மற்றும் ஒ.மே.செ களின் இணக்க கணாய்வு மேற்கொள்ள உருவாக்கப்பட்டது.

- அதன் படி அனைத்து பங்குத்தரகு நிறுவனங்களிலும் இணக்க கணக்கணாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- திட்ட கோரிக்கைகளுக்கு முழுமையாக இணங்குகின்ற நிறுவனம் இ.பி.ப.ஆ மற்றும் கொ.ப.ச யினால் நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட் கட்டணத்தை முழுமையாக பெறும்

3. கொழும்பு பங்குச்சந்தையின் பரஸ்பரத் தன்மையை இல்லாமல் செய்தலுக்கு வசதியளித்தல்

- தற்போதுள்ள ஆய்வுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன

- பரஸ்பரத் தன்மையை இல்லாமல் செய்தல் இறுதி வடிவத்திற்காக அதில் தேவையான புதிய மாற்றங்களை மேற்கொள்ளல்.

- திட்டப்பணியானது மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனையில் ஆரம்பிக்கப்படும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால(ஆ.அ.வ) முன்மொழியப்பட்ட மூலதன சந்தை அபிருத்தி திட்டத்தினை (மூ.ச.அ.தி)செயற்படுத்த வசதியளித்தல்

- உத்தேச மூ.ச.அ.தி யினால் வழங்கப்படவுள்ள கொள்கை சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பாக பல சுற்று கலந்துறையாடல்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் இ.பி.ப.ஆ அதிகாரிகளும் மேற்கொண்டனர். மேலும் அமுல்படுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி தொழில்நுட்ப உதவி தொடர்பாக காலவரைகள் இறுதிப்படுத்தப்பட்டன.

- பின்வரும் பகுதிகளில் ஆலோசனை சேவைகளை பரந்தளவில் மூ.ச.அ.தி பிரிவு வழங்கும்

- பரஸ்பரத் தன்மையை இல்லாமல் செய்தலுக்கு வசதியளித்தல்

- மதிப்பீடு மற்றும் மூலாதாரங்களின் அறிமுகம்

- நம்பிக்கை அலகு பொறுப்பாட்சி குறியீடு மற்றும் சட்டத்தை ஆய்வுசெய்தல்

- நிதியியல் அறிவை அதிகரித்தல் மற்றும் நம்பிக்கை அலகு பொறுப்பாட்சியை தெரியப்படுத்தல்

- பல அடுக்குகளை கொண்ட பல நிதி தயாரிப்புகளை உருவாக்கத்திற்கு

5. இ.பி.ப.ஆ னால் வசதியளிக்கப்படவுள்ள பரந்த மூலதன சந்தை அபிவிருத்திகளை உள்ளடக்கிய மூலதனச்சந்தை வியூகம் 2016-2020 அமைச்சரவை குறிப்பாணையாக இணைக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ க்கும் உலக வங்கிக்கும் இடையே நி.து.ந.தி இனது ஒப்படைப்புகளை முடிவுறுத்துவதற்காக பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

- நி.து.ந.தி ன் கீழ் பொருத்தமான முன்னெடுப்புகளுக்கு துணைபுரிவதற்காக முதலீட்டு நிதியளிப்பும் தொழில்நுட்ப உதவியும் செயலகத்திற்கு நேரடியாக வழங்கப்படும்.
- தொழில்நுட்ப உதவி ழற்றும் முதலீட்டு நிதியளிப்பை பெறக்கூடிய நி.து.ந.தி யின் கீழ் பல முக்கியமான முன்னெடுப்புகள் மற்றும் 2017 ம் ஆண்டில் இ.பி.ப.ஆ யின் திட்டக் குழுக்களுடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்படும்.
- இடர்நேர்க்கை அடிப்படையிலான மேற்பார்வை மற்றும் இடர்நேர்க்கை அடிப்படையிலான மூலதன கட்டமைப்பு என்பனவற்றின் அமுலாக்கத்திற்கான ஆலோசனை சேவைகள்.
- நேரலை சந்தை கண்காணிப்பு முறைமை மேம்படுத்தல்
- பொதுவான தரகர் பின்புல காரியாலயத்துடன் இணைந்த ஓர் ம.எ.த.பொ பொறிமுறையினை நிறுவதற்கான முறைமையினை கொள்முதல் செய்தல்.
- இ.பி.ப.ஆ வின் இடர்நேர்கை அடிப்படையிலான முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கொள்திறனை பலப்படுத்தல்.
- கூட்டாண்மை கடன் சந்தைக்கான வழங்கள் முறைமைப்படுத்தல்கள் செயல்முறைகள் மற்றும் மேற்பார்வை வடிவமைப்பினை பலப்படுத்துவதற்கும் இடர் நேர்க்கை அடிப்படையிலான மேற்பார்வை மேம்படுத்தல் ஆலோசனை சேவைகள்.
- 2ம் தரச்சந்தை கட்டமைப்பிற்கான (கூட்டாண்மை முறிகள்) ஓர் முழுமையான கண்டறிதல் செயற்திட்டம் மற்றும் தளத்திற்கு அப்பாலான ஓர் மேடைக்கு வசதியளிப்பதற்கான ஆலோசனை சேவைகள்.
- தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு இணைப்பாதுகாப்பு என்பனவற்றின் மேம்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வியூகத்தை விருத்திசெய்வதற்கும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகளை சீராக்குவதற்குமான ஓர் நேரலை அறிக்கையிடல் முறைமையினை கொள்வனவு செய்தல்.
- ஓடீசூடு வடிவ அறிக்கையிடலுக்கு வசதியளிப்பதற்கான ஆலோசனை சேவைகள்.
- கம்பனி ஆளுகை வடிவமைப்பு முக்கியமாக சிற்றளவு பங்குதாரர்களை பாதுகாத்து பலப்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகள்.
- அச்சு ஊடகம் இலத்திரனியல் மற்றும் சமூக வலையமைப்பின் ஊடாக கல்வி மற்றும் விழிப்புணர்வை கட்டியெழுப்புதல்.
- நம்பிக்கை அலகு பொறுப்பாட்சி விநியோகத்திற்கான தகவல்தொழில்நுட்ப மேடை.
- கொள்திறன் கட்டியெழுப்புதல் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மனிதவள செயற்திறன் மதிப்பீடு ஆகியவற்றினை பலப்படுதடதுவதற்கான தகவல் தொழில்நுட்ப மேலும் பல.

7. சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பின் தேச மீளாய்வை நிறைவு செய்ய வசதியளித்தல்

- செயலகமானது ஜுலை 23 – 29 வரை மதிப்பீட்டு குழுவின் பின்வருபவர்களுடனான சந்திப்புகளுக்கு வசதியளித்தது. இ.பி.ப.ஆ பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஊழியர்கள் அத்தோடு இ.பி.ப.ஆ யினால் நிறுவகிக்கப்படும் பல துறை பங்காளர்களுடனான தளத்திலான நேர்காணல் கொழும்பு பங்குச் சந்தை கம்பனிப் பதிவாளர் நாயகம் சட்டமா அதிபர் திணைக்களம் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை.
- வரைவு மதிப்பீட்டு அறிக்கையானது பல்வேறு தொடர்புடைய பங்குதாரர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களின் கருத்துக்கள் செயலத்தினால் மதிப்பீட்டு குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
- தேச மதிப்பீட்டு அறிக்கை சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பினால் 2017 முதல் காலாண்டில் இறுசெய்யப்படும் தறுவாயில் உள்ளது

4.9 இலங்கைகொடுகடன் தகவல் பணியகம் - செயற்திறன் அறிக்கை 2016

2016 தைமாதம்முதல் மார்கழிவரைவழங்கப்பட்டகடன் அறிக்கைகள்

	வருடம்	
மாதம்	2015	2016
தை	419,922	542,216
மாசி	482,812	608,460
பங்குனி	700,115	747,804
சித்திரை	482,754	505,259
வைகாசி	529,184	613,899
ஆனி	588,866	701,435
ஆடி	626,988	644,807
ஆவணி	590,708	723,556
புரட்டாசி	638,158	696,537
ஐப்பசி	616,550	729,901
கார்த்திகை	662,365	770,061
மார்கழி	563,138	665,032
மொத்தம்	**6,890,270**	**7,861,472**



அட்டவணை 4.16: 2016 தைமாதம்முதல் மார்கழிவரைவழங்கப்பட்டகடன் அறிக்கைகள



4.10 தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செயற்றிறன்

தொலைநோக்கு

தேவையுள்ள சகல துறைகளுக்கும் காப்பு வலையமைப்பையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தல்

செயற்பணி

பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்:

- சமூகத்தில் தேவையுள்ள சகல பிரிவினருக்கும் தாங்கிக்கொள்ளக்கூடியதும் வினைத்திறனானதும் முற்போக்கானதுமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்தல்;
- மாற்றமுறும் தேவைகளிலிருந்து எழும் உயர் இடர்களிலிருந்து காப்புப் பெறுவதற்கு வளங்களைத் திரட்டுதல் மற்றும் வேறு ஒழுங்குகளுக்கு ஊடாக உள்நாட்டுச் சந்தைக்குத் தீர்வுகளை வழங்குதல்; மற்றும்
- உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக ஆற்றலினை அளிப்பதற்கென இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தை ஒன்றை ஏற்படுத்தல்.

நோக்கெல்லையும் செயற்றிறன் பற்றிய சிறப்புக்கூறுகளும்

நிதிக் கூற்றுக்கள் – 2016 இன் முதலாவது வரைவிற்கிணங்க

2016 மொத்த இலாபம் (Profit before Tax) = ரூபா. 2,576 மில்லியன்

திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு = ரூபா. 3.2 பில்லியன்

1. அரச அலுவலர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார)

அரச அலுவலர்களின் நன்மை கருதி 1997 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டமே அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித் திட்டமென அறியப்படுகின்றது. ஆனால் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தனியார்மயமாக்கலுடன் அரசாங்கமானது 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக இத் திட்டத்தினைப் பொறுப்பேற்றதுடன் இலங்கை காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் தனியான அரசாங்கத் திட்டமொன்றாக நடைமுறைப்படுத்துகின்றது.

2.2 மில்லியன் ரூபா கொண்ட மொத்த காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதியான தொகையினைக் கொண்டதான இத் திட்டத்தின் கீழ் 825,000 உறுப்பினர்கள் தற்போது உள்ளனர்.

- ✓ சிகிச்சை நிலையக் கட்டணங்கள், சத்திரசிகிச்சை மற்றும் தொடர்புபட்ட மருத்துவ செலவுகள், பொது வைத்தியர் மற்றும் மருத்துவ நிபுணரினால் வழங்கப்படும் ஆலோசனைச் சேவைகளுக்கான கட்டணங்கள், மருத்துவப் பரிசோதனை மற்றும் நிலையத்திற்கு உள்ளேயான சிகிச்சைச் செலவுகள் உள்ளடங்கலான வைத்தியசாலை கட்டணச் செலவினை ஈடுசெய்தல் (150,000 ரூபா) .
- ✓ 400,000 ரூபாவிலிருந்து 500,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்ட இருதய சத்திரசிகிச்சையுடன் தொடர்புபட்ட செலவின ஈடாக்கம்.
- ✓ 150,000 ரூபாவிலிருந்து 200,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்ட புற்றுநோய் மற்றும் சிறுநீரக சத்திரசிகிச்சையுடன் தொடர்புபட்ட செலவின ஈடாக்கம்.
- ✓ 100,000 ரூபாவிலிருந்து 150,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுவரும் பிந்திய உரிமைக்கோரிக்கை நன்மையுடன் சேர்ந்த திடீர் மரண மற்றும் இயற்கை மரணங்களுக்கான செலவின ஈடாக்க காப்பீடுகள்

2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க, அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டமானது ஓய்வூதியதாரர்களுக்கு விரிவாக்கப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கென இரு (02) வகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கிணங்க பின்வரும் மருத்துவக் காப்புறுதித் திட்ட வகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. அக்ரஹார சாதாரண திட்டம்
2. அக்ரஹார தங்கத் திட்டம்
3. அக்ரஹார வெள்ளித் திட்டம்
4. ஓய்வூதியதாரர்களுக்கான அக்ரஹார ரெக்கவரண திட்டம்.

திடீர் விபத்துக் காப்பீடுகள் மற்றும் மருத்துவக் காப்புறுதிக் காப்பீடுகள் என்பவற்றுடன் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சுகாதாரக் காப்புறுதித் திட்டமும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் (SRCC&TF)

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு ஏற்ப 1987 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. தே.கா.ந.பொ. நிதியத்தின் கூட்டிணைப்புடன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் வரவிலிருக்கும் சகல பணங்களும் தே.கா.ந.பொ. நிதியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. இறுதியாக, தே.கா.ந.பொ. நிதியத்தினால் பேணப்படும் ஒரு விசேட கணக்கிற்கு இப் பணம் மாற்றப்பட்டதுடன் இத் திட்டமானது தற்போது தே.கா.ந.பொ. நிதியத்தின் முகாமையின் கீழ் உள்ளது.

2016 ஆம் ஆண்டில், தே.கா.ந.பொ. நிதியமானது இலாபத் தரகுக் கொடுப்பனவினை மீள அறிமுகப்படுத்தியதுடன் 2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் இலாபத் தரகினைச் செலுத்த வேண்டியுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்திற்கான மீள்காப்புறுதிக் காப்பீட்டினை கிரெசென்ற் குளோபல் யுகே லிமிடெட் நிறுவனத்திற்கூடாக ஆரம்பிக்கும் பொருட்டும் சோசெர் (Chaucer) நிறுவனத்தினால் வழிநடத்தப்படும் பொருட்டும் இக் காப்பீட்டின் பெறுகைச் செய்முறையினை தே.கா.ந.பொ. நிதியம் நடைமுறைப்படுத்தியது.

